★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 மார்கழி 6 ரபி-அவ் 5 இதழ் 311
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21—12—82

முள்ளிக்குளத்தில் திகில் சம்பவம்:

## கொள்ளையரை மடக்கி பொலிஸில் ஒப்படைத்தனர்!

### மினிபஸ் பிரயாணிகளின் துணிகரச்செயல்

[மன்னார்]

முள்ளிக்குளத்திலிருந்து மன்னாருக்கு புறப்பட்ட மினிபஸ்ஸை துப்பாக்கிமுனையில் மறித்து நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்த முகமூடி கோஷ்டியினரை அந்த மினிபஸ்ஸில் சென்ற பிரயாணிகள், துணிவுடன் எதிர்த்து துப்போராடி மூன்று முகமூடிக் கொள்ளையரை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன் ஓரளவு நகைகளையும் பணத்தையும் மீட்டுள்ளனர்!

நேற்றுக் காலை முள்ளிக்குளத்திலிருந்து மன்னாருக்கு புறப்பட்ட மினிபஸ்ஸில் 6 ஆண்களும் 5 பெண்களும் பயணம் செய்தார்களென்றும். இந்தபஸ் முள்ளிக்குளம் செல்லும்வழியில் 5 முகமூடிக்கொள்ளையர்களால் துப்பாக்கிமுனையில் வழிமறிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

# நாளை சர்வஜன வாக்கெடுப்பு

# பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

## யாழ்., வவனியா நோக்கி ஆயிரம் பொலிஸார் விரைவு

(கொழும்பு)

**நாளை நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்பையொட்டி, நாடுபூராவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.**

சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சகல பொலிஸ் நிலையங்ளுக்கும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளதுடன் குழப்பம் விளைவிப்போர். தூண்டுவோரை உடனடியாக கைதுசெய்யுமாறும் பணித்துள்ளார் அதே நேரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் எண்ணாயிரம் பொலிசார் நாட்டின் பல பகுதிகளிலும் அமர்த்தப்பட்டுள்ளதுடன் வவனியா, யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஆயிரம் பொலிசார் நேற்று சேவைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

சர்வஜன வாக்கெடுப்பை முன்னிட்டு இன்று காலை நாடு பூராவுமுள்ள 6080 வாக்களிப்பு நிலையங்களுக்கும் பொலிஸ்-இராணுவ பாதுகாப்புடன் வாக்குபெட்டிகளை தேர்தல் உத்தியோகத்தர்கள் எடுத்துச் செல்வார்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிசாரும் இராணுவத்தினரும் கூட்டாக ஈடுபடுவார்கள்.

நாளைமாலை நான்கு மணிக்கு வாக்களிப்பு முடிந்ததும் வாக்குப்பெட்டிகள் அந்தப்பகுதி கச்சேரிகளுக்கு கொண்டுசெல்லப்பட்டு வாக்குகள் எண்ணப்படும்.

முதலாவது முடிவு அதிகாலை மூன்று மணியளவில் உத்தியோக பூர்வமாக வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் வாக்குப்பதிவுகளை நடத்த இப்பொழுது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு ஆர் சுந்தரலிங்கமும் தேர்தல் ஆணையாளரும் நேற்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளான திருகோணமலை, மூதூர், பொலன்நறுவ, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களை ஹெலிகொப்டரில் சென்று பார்வையிட்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்கள் உட்பட சகல வாக்களிப்பு நிலையங்களிலும் நாளை புதன்கிழமை குறித்த நேரத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெறுமென்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்தடி சில்வா அறிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து 3,000 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளை மேற்கொள்வதற்காக பல்வேறு இடங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை, திருகோணமலை ஆகிய இடங்களுக்கு தேர்தல் உத்தியோகத்தர்கள் ஹெலிகொப்டர் மூலம் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். [இ-வெ]

## கார் விபத்தில் இளைஞர் பலி!

### துப்பாக்கிப்பிரயோகம் செய்து காரை பொலிஸார் கைப்பற்றினர்

[மாவிட்டபுரம்]

வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளைஞரை மோதிவிட்டு விரைவாகச் சென்ற கார் ஒன்று, காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தின் முன்பாகவிருந்த பொலிஸ் தடையையும் மோதி பலத்த சேதத்தை ஏற்படுத்தி தப்பிச் செல்கையில், பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து காரை நிறுத்திய சம்பவம், நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது

இது தொடர்பகக் கிடைத்துள்ள விபரங்கள் வருமாறு:-

வீமன்காமத்தைச் சேர்ந்தவரான திருநாவுக்கரசு சதானந்தன் [25-வயது] என்பவர் கே. கே. எஸ் வீதி வழியாக மாவிட்டபுரம் மடத்தடியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்தில் இருந்து அதிவேகமாக வந்ததாகக்கூறப்படும் கார், அவரை மோதி விபத்துக்குள்ளாக்கியதில் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார் மரணமானவர் சென்றுகொண்டிருந்த சைக்கிள் பலத்த சேதமடைந்தது.

விபத்து நடைபெற்ற இடத்தில் கூடிய பொதுமக்கள் காரின் இலக்கத்தகடு ஒன்றினை ஸ்தலத்தில் கண்டெடுத்து காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்

மரணமானவர் தெல்லிப்பளையிலுள்ள மின்சார வேலைத்தளம் ஒன்றில் பொறுப்பாளராகக் கடமையாற்றியவர் என்றும் வேலை முடிந்து வீடு செல்கையிலேயே விபத்து நேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

அதே நேரத்தில் திருநாவுக்கரசு சதானந்தனை மோதிய காரும் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத் தடையையும் மோதி சேதப்படுத்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## 3 இளைஞர்கள்கைது

### காரும் கைப்பற்றப்பட்டது

[புலோலி]

நெல்லியடியில்சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய சாரம் ஷேர்ட் அணிந்த மூன்று இளைஞர்களைப்பொலிசார் கைதுசெய்துள்ளனர்

இவர்களுடன் புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த காரொன்றும் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டது.

பருத்தித்துறை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனுப் தஃபீன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியிடமே, சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞர்கள் காருடன் சிக்கிக் கொண்டார்கள்

சீ சந்திரபோஸ், சி கந்தசாமி, சி. அருள்ஞானம் ஆகிய மூன்று இளைஞர்களையும் பொலிசார் விசாரணையின் பின் பருத்தித்துறை நீதிபதி திரு வி பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி மூவரையும் ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். கைப்பற்றப்பட்டகார் நீதிமன்றப்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வெள்ள நிவாரணம்:

## ஜனாதிபதி பிரதமர் நேரில் ஆராய்ந்தனர்

### அதிகார துஷ்பிரயோகம் பற்றி பட்டிருப்பு எம். பி. புகார்

(நமது நிருபர் இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிடுவதற்காகஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன, பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா, சமூகசேவை அமைச்சர் திரு. அசோகா கருணாரத்ன ஆகியோர் நேற்று இங்கு விஜயம் செய்தனர்

மட்டக்களப்புசெயலகத்தில் வெள்ளநிவாரணம் பற்றிய மகாநாடொன்று நடைபெற்றபோது மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து வெள்ள நிவாரணம்பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பித்தார்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் 64,000 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனவென்றும், இவர்களில் 500 குடும்பங்கள்வீடுகளைமுற்றாக இழந்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டிருப்பு எம். பி திரு. பி. கணேசலிங்கம், தனது தொகுதியில் வெள்ளநிவாரணம் வழங்குவதில் ஒரு சில மேலதிகாரிகள் அதிகாரதுஷ்பிரயோகம் செய்து சிலரைப் புறக்கணிப்பதாகபுகார்தெரிவித்தார்

அமைச்சர்திரு கே. டபிள்யூ தேவநாயகம் இத்தகைய பிரச்னைகள் இடம் பெற்றதாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்றார்

மட்டக்களப்பில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுப்பதற்கு அங்குள்ள 44 மைல் வாவியை கூடியவிரைவில் அழமாக்குமாறு அரசாங்க அதிபர் திரு எம் அந்தோனிமுத்து பிரதமமந்திரியைக் கேட்டுக்கொண்டார்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்குவெள்ள நிவாரண முற்பணமாக வழங்கப்பட்ட 500 ரூபா கல்வி, நீர்ப்பாசன, பெருந்தெருக்கள் உட்பட சில திணைக்களங்களுக்கு வழங்கப்படவில்லையென்றும் பிரதமமந்திரிபிடம் புகார் செய்யப்பட்டது.

பிரதமர் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சு செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணம் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் அமைச்சர் தேவநாயகம், அமைச்சர் இராசதுரை, மட்டக்களப்பு மாவட்ட சபைத்தலைவர் திரு. சி சம்பந்தமூர்த்தி, பட்டிருப்பு எம் பி திரு. பி. கணேசலிங்கம் உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்களும், மாவட்டசபை உறுப்பினர்களும் பல்வேறு திணைக்களங்களின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். [வெ]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Ford Capri 1600 G.T 6 Sri 7496 கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: வ. சற்குணசிங்கம், கோப்பாய் வடக்கு, கோப்பாய். 5529

யாழ். மருத்துவக்கல்லூரிக்கு அண்மையில் 2½ பரப்பு வீடு கட்ட உகந்த காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 51/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 5444

29 ஆசனங்களுடைய 6 Cylinder isuzu Mini Bus உடனடியாக விற்பனைக்குண்டு அல்லது வாகனங்களுடன் மாற்றிக்கொள்வது விரும்பத்தக்கது. விபரங்களுக்கு, கல்யாணி கிறீம்கவுஸ் 73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone: 24077 or 24428 5557

1 வருடம் பாவித்த புதிய 6 கன அடி. SINGER குளிர்சாதன பெட்டி விற்பனைக்கு. தொடர்பு: நாவலர் வீதி, 466/4 முத்ததம்பி அவனியூ, யாழ்ப்பாணம். 5558

சகல வசதிகளுடன் கூடிய வீடும், இரண்டு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: எஸ். தெய்வேந்திரராஜா, பருத்தித்துறை வீதி, 3-ம் கட்டையடி, கட்டப்பிராய், கல்வியங்காடு, யாழ்ப்பாணம், (5560)

# “ஒருநாள் பூஜை ஒருகோடி நாள் பலனைத் தரும்”

## மார்கழி சிறப்புப் பற்றி வாரியார்

[மாவிட்டபுரம்]

“நாட்டிலே அன்பும், அறமும், சாந்தியும் நிலவவேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் ஆண்டவனின் குழந்தைகள் என்பதை மறந்துவிடலாகாது? பேதங்களை விடுத்து ஒன்றாக வாழவேண்டும். ஒவ்வொருவரும் தன்னை திருத்திக்கொண்டால் உலகம்திருந்தும், அதை விடுத்து உலகத்தை திருத்த நாம் முயலக்கூடாது”

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் இன்னிசை விரிவுரையாற்றிய திருமுருக கிருபானந்தவாரியார் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் மார்கழி மாதத்தின் சிறப்பைப் பற்றி குறிப்பிட்டார்.

“நதிகளில் கங்கையும் மலைகளில் மேருவும் மணிகளில் மாணிக்கமும், தெய்வங்களில் முருகனும் சிறப்புப் பெறுவது போன்று மாதங்களில் மார்கழி சிறப்புப்பெறுகிறது. மார்கழி மாதத்தில் ஒருநாள் செய்யும் பூஜைவழிபாடு ஒருகோடி நாள் செய்யும் பூசை வழிபாட்டின் பலனைத் தரவல்லது.

இந்த மாதம் பெண்களுக்கு முக்கியமான மாதமாகும். இந்த மாதத்தில் திருவெம்பாவை, திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி என்பனவற்றை ஓதி வாழ்வில் உய்தி பெறுவோமாக” என்று அவர் கூறினார்.

துர்க்காதேவியின் பெருமைகளையும் அவர் எடுத்துக் கூறினார்.

வாரியாருக்கு பொன்னுடை ஒன்று போர்த்தப்பட்டது. அவர் அதனை ஏலத்தில் விட்டார். துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் அதனை 300 ரூபாவுக்கு வாங்கினர். இதனையடுத்து குப்பிளான் கற்கரைக் கற்பகவிநாயகர் ஆலயத்திலும் வாரியார் இன்னிசை விரிவுரை நிகழ்த்தினார்.

## பரீட்சையில் தோல்வி மாணவி தற்கொலை

[பண்டத்தரிப்பு]

பரீட்சையில் சித்தியடையவில்லை என்று தாய் கண்டித்ததை பொறுக்க முடியாத 13 வயது மாணவி நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பண்டத்தரிப்புப் பாடசாலையொன்றில் கல்வி கற்று வரும் மிக்கேல்பிள்ளை மரியகொரற்றி என்னும் 13 வயதுடைய மாணவியே இவ்வாறு நஞ்சருந்தி தன்னுயிரை மாய்த்துக் கொண்டவராவர்.

இவரது மரணவிசாரணையை பண்டத்தரிப்பு பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அந்தனி சியார் நடத்தினர்.

விசாரணை முடிவில் நச்சுத்திராவகம் அருந்தியதால் ஏற்பட்ட தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

# “ஈழத்து இலக்கியத்தின் வழிகாட்டும் சக்தியாகத் திகழ்ந்தார்!”

## கைலாசபதிக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அஞ்சலி

(கொழும்பு)

‘கைலாசபதி ஒரு பேரறிஞராக, ஆசானாக, இலக்கிய வழிகாட்டியாக இருந்த அதே வேளையில் அவர் ஒரு இயக்கமாகவும், இயக்கத்தின் வழிகாட்டுச் சக்தியாகவும் கடந்த இரண்டரை தசாப்தங்களாகத் திகழ்ந்தார்’, என்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிறைவேற்றியுள்ள ஒரு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தாபனமான ஓராண்டு காலத்தினுள் அதில் இணைந்துகொண்ட கைலாசபதி கால் நூற்றாண்டு காலமாக அதன் அணியில் கௌரவமான ஸ்தானத்திலிருந்ததுடன், ஈழத்து இலக்கியத்தின் வளர்ச்சிக்கு, முன்னேற்றத்திற்கு அது நடத்திய எல்லா வரலாற்றுச் சிறப்புமிக்கப் போராட்டங்களிலும் அவர் முதல் வரிசையில் உறுதியுடன் நின்றார்.

மரபுப் போராட்டம், ‘இழிசனர்’ எதிர்ப்புப்போராட்டம் தமிழகத்து வர்த்தக இலக்கிய ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம், ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஈழத்துப் பத்திரிகைகள் முதன்மைத்துவமளிக்க வேண்டும் என்ற போராட்டம், எழுத்தாளர்களுக்குச் சன்மானம் வழங்கப்படவேண்டுமென்ற போராட்டம், தேசிய இலக்கியத்திற்கும் அதைத்தொடர்ந்து ஜனநாயக இயக்கத்திற்காகவும் நடத்தப்பட்ட போராட்டம், தமிழ் மொழியினதும்–தமிழ் மக்களினதும் உரிமைகளுக்கான போராட்டம், தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்து கலாசார, பொருளாதார, அரசியல் விடுதலைக்காக நடத்தப்பட்ட போராட்டம், ஏற்றத்தாழ்வுகளையும், சுரண்டலையும், ஒடுக்குமுறையையும் எதிர்த்த சமூக ஜனநாயக மாற்றத்திற்கான போராட்டம், சோஷலிஸ எதார்த்தவாத, சோஷலிஸ நிலைபாடுகளுக்கான போராட்டம்ஆகிய கலை, இலக்கிய, சமூக தோற்றப்பாடுகளில் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், அனைத்து முற்போக்குச் சக்திகளுடன் மேற்கொண்ட இயக்கங்கள், போராட்டங்கள் அனைத்திலும் பேராசிரியர் கைலாசபதி முன்னணி போராளியாகவும், இந்தப் பேராட்டங்களுக்கான தத்துவார்த்த திசைகாட்டிகளுள் ஒருவராகவும் இருந்தார்.

இலக்கியச் சிந்தனைக்கு விஞ்ஞான சோஷலிச சித்தாந்தத்தின் அடிப்படையில் ஒரு புதிய வீச்சையும், திசை வழியையும் பரிமாணத்தையும் அவர் அளித்தார். ஈழத்து இலக்கியத்தின் வளர்ச்சி நெறிகளை வரையறுப்பதிலும் செம்மைப் படுத்துவதிலும் பெரும் பணியாற்றினர்.

நாவலர் பெருமானை ஈழத்து தமிழ் இலக்கிய முதல்வராகவும், ஈழத்து தேசிய இயக்கத்திற்கு வித்திட்ட முன்னோடியாகவும் இ. மு. எ. ச இனம் கண்டு பிரகடனப்படுத்திய போது இந்த உண்மையை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிறுவுவதில் கைலாசின் ஆய்வறிவாற்றல் பெரும் பங்கினைச் செய்துள்ளது.

பத்திரிகையாளராக திரு. கைலாசபதி செய்த பணிகள் பத்திரிகா தர்மத்திற்கு புதுப் பாதையை வகுத்தளித்தது என உறுதியுடன் கூறலாம்.

தமிழ் ஒப்பியல் வரலாற்றில் ஒரு புதிய விஞ்ஞானபூர்வ [illegible] துவக்கி வைத்த பேராசிரியர் கைலாசபதி சமகால அறிஞர்களை ஒப்பீடுசெய்ததன் மூலம் ஒப்பியல் இலக்கியத்தின் கால–சமூகப் பிரச்னைகளை ஏற்படுத்தியதுடன் இந்தக் கலைக்கு ஒரு புதிய வலுவினையும் அளித்தார்.

இலக்கிய உலகம், அறிவுலகம், பாட்டாளி இயக்கம் ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதன்மூலமும் போராட்டத் துவஜத்தை [illegible] நெஞ்சுரத்துடன் முன்கொண்டு செல்வதன் மூலமும் பேராசிரியரின் இலட்சியங்களை நிறைவேற்ற பற்றுறுதியுடன் முன்வருமாறு அனைத்து [illegible]களையும், அறிவாளிகளையும், உழைப்பாளிகளையும் கேட்டுக்கொள்கிறோம்.’

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 6ம் திகதி

செவ்வாய்க்கிழமை

[21—12—82]

மேடம்: சிறு பிணிவாட்டும். ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக் கொள்ள வேண்டாம் வாழ்க்கை இன்றுசுமையாகத் தோன்றக்கூடும். சுமாரான தினம்.

இடபம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமானதினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு, தாய் வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். வாகன நலனும் இன்று இடம்பெறலாம்.

மிதுனம்: இதயத்தில் ஏக்கம் இன்று தணியும். தேடிய பொருள் காலடியில் சரணடையும். பரோபகாரச் சிந்தையும் மேலிடும். நண்பர் ஒருவருக்கு கைகொடுத்து உதவுவீர்கள்.

கடகம்: அரச பயத்துக்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ள வேண்டாம் மின்னியல்பொறியியல் பகுதிகளில் கடமையாற்றுபவர்கள் அதிக கவனம் எடுக்கவும்.

சிங்கம்: வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும். எண்ணம் போல யாவும் நடக்கும். உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் அரசியலிலும் பிரகாசிக்கஇடமுண்டு.

கன்னி: தொழில் துறையில் போட்டா போட்டிகள் தலைதூக்கும் முன்னேறுவதற்கான சந்தர்ப்பமொன்று கைநழுவிப் போகலாம். உயரபடிக்கு அடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள்.

துலாம்: மனம்போல்வாழ்வு இன்று மலரும். கடமையாற்றும் இடத்தில் இன்று ஒத்துழைப்புக் கிடைக்கும் உருக்கு பதவி உயர்வும்கிடைக்கலாம். முயற்சியால் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்: நீண்ட நாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம். வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு. சிலர் புதிய துறைகளில் முதலீடு செய்ய விரும்புவார்கள். இன்று சிறப்பான தினம்.

தனு: கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராய பேதங்கள் மறைந்து மீண்டும் இணைவர். குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும். தொழில் புரியும் இடத்தில் நல்ல மாற்றங்கள் உண்டு.

மகரம்: திடீர்த்தாக்குதல் உங்களைத் திகைக்க வைக்கலாம் நினைப்பது ஒன்று நடப்பது வேறு ஒன்றாக இருக்கும், வெளியூர்ப் பயணம் சிலருக்கு வேதனையைத் தரலாம். பிணிக்கு இடம் கொடாது நடக்கவும்.

கும்பம்; இடர்கள் பல தாக்கும். இதயத்தில் எரிமலை குமுறும் உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும். அவதானம் வேண்டும்.

மீனம்: சுற்றுடலில் உங்கள் வாக்கு வளரும். கொடுக்க வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவர். குடும்பத்தில் பிணக்குகள் சுமுகமடையும் சிலருக்கு அதிர்ஷ்டலாபமுண்டு.

சோதிடக் கலாநிதி

**திருமலை**

**க. வேலுப்பிள்ளை**

### காவலிலுள்ள மதகுருமார் பற்றி

# நூரளை பங்குச்சபை அறிக்கை ஒருதலைப்பட்சமானது!

## பருத்தித்துறை பங்குச்சபை கண்டனம்

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர்பற்றி நுவரெலியா பங்குச் சபை விடுத்த அறிக்கை விளங்காத்தனமும் ஒருதலைப்பட்சமுமான தீர்ப்பெனவும் பருத்தித்துறை பங்குச்சபை கண்டித்துள்ளது.

பருத்தித்துறை பங்குச்சபையின் கூட்டம் கடந்த 12ம் திகதி ஞாயிறு அன்று நடைபெற்றபொழுது அண்மையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஜனாதிபதிக்கு யாழ். ஆயர் விடுத்த அறிக்கைக்கு பூரண ஆதரவு கொடுப்பதெனவும், கைதுசெய்யப்பட்ட குருமார்கள், இளைஞர்கள், விரிவுரையாளர், அவரது மனைவி ஆகியோர் சாதாரண சட்டங்களின் கீழ் விசாரணை செய்யப்படவேண்டும் அல்லது விடுதலை செய்யப்படவேண்டும் என கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு வடபகுதியில் பயங்கரவாத தடைச்சட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள்பற்றி யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு. பி. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் விடுத்த அறிக்கை நியாயபூர்வமானதும் அரசினால் அங்கீகரித்து உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய தொன்றுமெனவும் எமது சபை கோரிக்கை விடுப்பதுடன் எங்கள் ஆயரின் அறிக்கைக்கு பூரண ஆதரவினையும் கொடுக்கிறது.

அடிப்படை மனித உரிமைச் சட்டத்திற்கு முரணான பயங்கரவாத தடைச் சட்டத்தினால் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வண. குருப்பிரசாதிகள், விரிவுரையாளர் அவரது மனைவியார், ஏனைய இளைஞர்கள் ஆகியோரின் நிலை கண்டு எமது பங்குச்சபை மிகவும் கவலைகொள்ளுகின்றது. இவர்களை எதுவித தாமதமின்றி சாதாரண சட்டங்களின் கீழ் விசாரணைசெய்ய வேண்டும் அல்லது உடனடியாக விடுதலைசெய்யவேண்டும் என்று இச்சபைகோருகின்றது.

சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படவேண்டுமென்று குரலெழுப்பும் பொதுநல ஸ்தாபனங்களும், குழுக்களும் வடபகுதியில் நீதியும், நியாயமும் நடைமுறைப்படுத்தப் படுகின்றனவா, மக்களின் உரிமை மதிக்கப்படுகின்றதா என்பதை ஆராய்ந்து இவை நிலைநாட்டப்படக்கூடிய நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

யாழ். நூல்நிலையத்திற்கு

## மாணவன் சேமித்த ரூபா 1000 நிதி

[யாழ்ப்பாணம்]

யாழ் மத்திய கல்லூரி மாணவன் செல்வன் பிரேமானந்த குலசேகரம் யாழ். நூல் நிலையநிதி, தான்சிறிது சிறிதாகச் சேமித்த பணத்தில் ஆயிரம் ரூபாவை வழங்கினர். இத்தொகையை யாழ் முதல்வர் திரு இராசா விசுவநாதனிடம் பதினேழு வயதான அம்மாணவன் கையளித்தபோது முதல்வர் [illegible] மாதிரியைப் பாராட்டினர்.

## "விசாரணைக்குள்ளாகும் சந்தேகநபர்களை

# நீண்டநாட்கள் பாதுகாப்பில் வைக்கக்கூடாது"

### தமிழக ஆளுநர் குரானா கருத்து

சென்னை டிச 20

"விசாரணைகளுக்குள்ளாகும் சந்தேகநபர்களை நீண்ட நாட்களுக்கு பாதுகாப்பில் வைத்திருக்கக்கூடாது" என்று தமிழ்நாடு ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் எஸ். எம். குரானா தெரிவித்துள்ளார்.

சென்னை மத்திய சிறைக்கூடத்தில் சுமார் 4 லட்சம் ரூபா செலவில் கைதிகளுக்கென கட்டப்பட்ட கலை அரங்கத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆளுநர் குரானா மேலும் கூறியதாவது: "தண்டனைகள் குற்றவாளிகளை புண்படுத்துபவனவாக அமையக்கூடாது. அவர்களை சீர்திருத்துபனவாக அமைதல் வேண்டும்.

"சிறைச்சாலைகள் அறியாமையினாலும், சந்தர்ப்பவசத்தாலும் குற்றமிழைத்தவர்களை ஏற்று அவர்களை நற்பிரஜைகளாக மாற்றும் புனர்வாழ்வு நிலையங்களாக மாற வேண்டும்.

"குற்றச்சம்பவங்கள் பற்றிய விசாரணைகளுக்காக அழைத்துச்செல்லப்படும் சந்தேக நபர்கள் நீண்டநாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்படல் கூடாது அவர்கள் மீதான விசாரணைகள் முடிவடைந்ததும் உடனடியாக அவர்கள் விடுதலை செய்யப்படல் வேண்டும்."

இந்த வைபவத்தில் பேசிய சிறைச்சாலை உயர் அதிகாரியொருவர் தமிழ் நாட்டுச் சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு சிறந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவென்றும் மதுரை மத்திய சிறைச்சாலையில் இருபது கைதிகள் தபால் கல்வி மூலம் பட்டப் படிப்பினை மேற்கொள்கின்றனரென்றும் தெரிவித்தார். [கி]

## இஸ்ரேல் - லெபனான் சமாதான பேச்சு?

பெய்ரூட் டிச 20

லெபனான், இஸ்ரேல் ஆகியனவற்றுக்கிடையிலான புதிய சமாதான திட்டம் வெற்றியடையும் அறிகுறிகள் தென்படுகின்றன.

புதிய சமாதானத்திட்டத்தின் கீழ் லெபனானுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த இஸ்ரேல் முன்வந்துள்ளது.

இப்புதிய பேச்சுவார்த்தைகளில் இருநாடுகளுக்குமிடையே உடன்பாடு ஏற்படும் பட்சத்தில் இன்னும் ஒரு மாதகாலத்தில் லெபனானிலுள்ள வெளிநாட்டுப்படைகள் ஓரளவு வெளியேறலாமென்றும் பின்னர் இருமாதகாலத்தில் அவை முற்றாக வெளியேறி விடுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

லெபனான் அரசாங்கம் தனது நாட்டில் வெளிநாட்டுத்துருப்புகள் குறிப்பாக இஸ்ரேலியத் துருப்புகள் இருந்து வருவது குறித்து இஸ்ரேலிய உயர் அரச பீடத்துடன் நேரடிப் பேச்சுக்களை நடத்த விரும்பியிருந்தது.

புதிய சமாதானத்திட்ட பேச்சுக்கள் முடிவடைந்து முடிவுகள் எடுக்கப்படும்வரை இஸ்ரேலியப்படைகள் எதிர்பார்த்ததைவிட கூடுதல் நாட்கள் லெபனானில் இருந்து விடக்கூடுமென்றும் அரசியல் அவதானிகளில் ஒரு சாரார் கருத்துத் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க பாலஸ்தீன இயக்கத்தலைவர் யாஸீர் அரபாத் இஸ்ரேலுடன் தாம் நடத்திய போராட்டங்களின் பிரதான நோக்கம் தமக்கென ஒரு தனி நாட்டினை அமைத்துக்கொள்வதே என்று மீண்டும் கூறியுள்ளார். அத்துடன் பாலஸ்தீன இயக்கம் தான் கொண்ட நோக்கத்திலிருந்து மாறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். (கி)

## ஈராக்பகுதியில் ஏவுகணை தாக்குதல்! 48 ஈரானியர்பலி!

தெஹ்ரான் டிச 20

தெற்கு ஈராக்கியப் பகுதியிலிருந்து ஈராக் நேற்று புதிய தாக்குதல் ஒன்றை கொடுத்தது. ஈரானின் உத்தியோக பூர்வபத்திரிகை இத்தகவலை வெளியிட்டது.

ஈராக்கின் இத்தாக்குதல் ஏவுகணைகள் கொண்டே நடத்தப்பட்டது. அத்துடன் தாக்கப்பட்ட பகுதிக்கும் ஈராக் தாக்குதலை ஆரம்பித்த பகுதிக்குமிடையே குறுகிய இடைவெளியே காணப்பட்டதால் சேதங்கள் சற்று அதிகமாக இருந்ததென்றும் ஈரானியர் 48 பேர் வரை மாண்டிருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது

ஈராக் இத்தாக்குதல் பற்றி உத்தியோக பூர்வமாக எதனையும் வெளியிடவில்லை, [கி]

## மத்திய இத்தாலியில் நிலச்சரிவு

### 3500 பேர் வீடுகளை இழந்தனர்!

ரோம், டிச. 20

அட்றியாட்டிக் கடலிலுள்ள மத்திய இத்தாலியின் கரையோர நகரான அங்கோனாவில் நிலச்சரிவு ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை ஏற்பட்டது. இதனால் பெருஞ்சேதங்கள் கட்டிடங்களுக்கும், ஏனைய பொது உடமைகளுக்கும் ஏற்பட்டுள்ளன. 3500 பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

இக்கரையோர நகரம் சுமார் ஒரு லட்சத்து பத்தாயிரம் மக்கள் தொகையைக் கொண்டதாகும். உயிர்ச்சேதங்கள் மிகக் குறைவென்றே தெரிவிக்கப்பட்டது.

நிலச்சரிவு ஏற்படப்போவதை ஏற்கனவே இப்பகுதி மக்கள் அறிந்து கொண்டதாலேயே உயிர்ச்சேதங்கள் பெருமளவு தவிர்க்கப்பட்டன

இராணுவத்தினரும், கடற்படையினரும் மக்களையும், அவர்களது உடமைகளையும் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வதில் ஒத்துழைப்பு வழங்கினர்.

பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றோர், தமது வீடுகளின் ஜன்னல் கண்ணாடிகள், மற்றும் உடையக் கூடிய பொருட்களையும் தம்முடன் எடுத்துச்சென்றனர். [கி]

## ஆஸி. சாம்பியன்

மெல்போர்ன், டிச. 20

அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக ஹொக்கிச் சாம்பியன் போட்டியில் அவுஸ்திரேலியா இந்தியாவை 6-1 என்ற ரீதியில் வென்று சாம்பியனானது.

ஆட்ட இறுதிநேரம் வரை 6-0 என்று அவுஸ்திரேலியாவே முன்னணியில் நின்றது, இந்திய கப்டன் ஜவர் இக்பால் ஆட்டம் முடிவடைய சொற்பநேரமிருக்கையில் ஒரு கோலைப்போட்டார்.

நெதர்லாந்து மூன்றுமிடத்தைப் பெற்றுக் கொண்டது இங்கிலாந்துடனேயே இந்த இடத்துக்கான போட்டியில் நெதர்லாந்து மோதியது.

இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து நான்காமிடத்தையும், மே. ஜேர்மனி ஐந்தாமிடத்தையும், பாகிஸ்தான் ஆறுமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

முன்னாள் உலக ஹாக்கிச் சாம்பியன் நெதர்லாந்து என்பது குறிப்பிடத்தக்கது. [கி]

## பெரும் பூகம்பம்

சிட்னி, டிச 20

அவுஸ்திரேலியாவுக்கு 2000 மைல்கள் தொலைவிலுள்ள [illegible] தீவொன்றில் நேற்று பெரும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது.

இதனால் அத்தீவில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரம் எதுவும் தெளிவாக தெரிவிக்கப்படவில்லை. மக்கள் செறிவு மிகக் குறைவான பகுதியே அத்தீவு என்று கூறப்பட்டது (கி)

## "கட்சி மாறுவதை தடுக்க சட்டம் வேண்டும்"

புதுடில்லி டிச. 20

"கட்சி மாறும் அரசியல் வாதிகளுக்கெதிராக சட்டம் கொண்டுவரப்பட வேண்டும்" என்று இந்திய ஜனதா கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மைசூரில் கூட்டமொன்றில் பேசிய அவர் அச்சட்டம் கட்சி மாறுபவர்களை மீண்டும் அவர்களது கட்சிகளுக்கே திருப்பி அழைக்கக்கூடியதாகவுமிருக்கவேண்டுமென்று கூறினார்.

அண்மைக்காலங்களில் ஜனதாக்கட்சியைச் சேர்ந்த சிலர் கட்சி மாறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## "அபிவிருத்தி திட்டத்தை தொடரவே மக்கள்தீர்ப்பு"

### மன்னார் மாவட்ட அமைச்சர் கருத்து

[மன்னார்]

"சர்வஜன வாக்கெடுப்பு என்பது ஒரு புதுவிதமான தேர்தல். நாம் இதுவரை காலமும் கட்சிக்காக வாக்களித்தோம். சர்வசனவாக்கெடுப்பு தேர்தலில் கட்சி பேதம் கிடையாது"

இவ்வாறு மன்னார் திறந்த வெளியரங்கில் சர்வசனவாக்கெடுப்புக்கு ஆதரவாக நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மூதூர் எம். பியும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்றூப் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

"கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதிதேர்தலில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு அமோகவெற்றி கிடைத்தது ஜனாதிபதியின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறவேண்டுமானால் சர்வசன வாக்கெடுப்பிலும் அமோக வெற்றி கிடைக்க வேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டில் எந்த அபிவிருத்தித் திட்டத்தையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும்.

தொடர்ந்தும் பல தேர்தல்களை நடத்தி காலத்தை வீணாக்காது அபிவிருத்தித்திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ளவே சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுகிறது

"ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஜனாதிபதியினால் மன்னார் மாவட்டத்தில் 40 கோடி செலவில் பல அபிவிருத்தி வேலைகள் ஆரம்பித்துவைக்கப்படும். கடந்த ஐந்து வருடங்களில் மன்னாரில நடைபெறாத பாரிய அபிவிருத்திவேலைகள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படும்

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்க்கும் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் வேண்டுமானால் அவர்களது பதவிகளை ராஜினாமா செய்யலாம் அவர்கள் தமது பதவிகளை ராஜினாமா செய்தால் அத்தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்படும். தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் தமது பதவிகளை ராஜினாமாசெய்யாது விட்டால் அவர்கள் தொடர்ந்தும் எம். பிகளாகவே இருப்பார்கள்.

"சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பலர் சர்வசன வாக்கெடுப்புக்கு ஆதரவுதருகிறார்கள் இதனால் சிறீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பலர் தினமும் ஐ. தே. கட்சியில் வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றனர். மன்னார் மாவட்டத்தில் ஐ. தே. கட்சிக்கு கிடைத்துவரும் ஆதரவு படிப்படியாக அதிகரித்தே வருகிறது.

## "ஆட்சியைநீடிக்கும் தேர்தல் இங்குமட்டுமே நடக்கிறது"

### -- அமிர்தலிங்கம்

(புலோலி)

"யுத்தகாலங்களில் தேர்தல்களை நடத்தி மக்களைப் பிளவுபடுத்தாது ஒற்றுமையாக வைத்திருப்பதற்காகவே சில நாடுகளில் சர்வசனவாக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது, ஆனால் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை நீடிப்பதற்காவே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க முயல்கின்றார். தமிழ் மக்கள் தமது உரிமையைநிலைநாட்டவும், தமிழ் மக்கள் ஈழவிடுதலையை உறுதிப்படுத்தவும் இச்சர்வசன வாக்கெடுப்பைப் பயன்படுத்த வேண்டும்"

மேற்கண்டவாறு வல்வெட்டித்துறையில் நடைபெற்ற சர்வசனவாக்கெடுப்பு எதிர்ப்புப் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறைநகரசபை உறுப்பினர் திரு. என். எஸ். இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு அமிர்தலிங்கம் குறிப்பிட்டதாவது:

"இம்மாதம் 22ம் திகதி நடைபெறஇருக்கும் சர்வஜன வாக்கெடுப்பு இலங்கையில் நடைபெறும் புதுமையான தேர்தலாகும். தேர்தல்களை ஒழிப்பதற்கா இத்தேர்தல் நடாத்தப்படுகின்றது. கடந்த வருடம் எலிசபெத் மகாராணியாரை அழைத்து வந்து ஐம்பது ஆண்டு சர்வசனவாக்குறுதியைப் பொன்விழாவாகக் கொண்டாடினார்கள். கடந்த 50 ஆண்டுகளில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1930ம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

"உலகயுத்த நெருக்கடியே இத்தகைய சந்தர்ப்பத்தை உருவாக்கியது, அப்போது இங்கிலாந்திலும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டது யுத்தகாலங்களில் தேர்தல்களை நடாத்தி மக்களைப் பிளவுபடுத்தாது ஒற்றுமையாகவும், ஐக்கியமாகவும் வைத்து இருப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இலங்கையில் ஆட்சி அதிகாரத்தை நீடிக்கவே ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்க முயலுகின்றார்.

"மக்களின் உரிமையை இத்தேர்தல் மூலம் நிலைநாட்ட வேண்டும். இந்நாட்டில் சர்வாதிகார ஆட்சி ஏற்பட்டால் சிங்கள மக்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்று எண்ணக்கூடாது தமிழ்மக்களே வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள். எந்த ஒருஎதேச்சாதிகார நாட்டிலும் உரிமை குறைந்த மக்களேதான் பாதிக்கப்படுகின்றனர் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அரசாங்கத்தின் கோரிக்கைக்கு எதிராக வாக்களித்து மக்களின் இறைமையைப் பாதுகாக்க வேண்டும்.

"இலங்கையில் ஒரு தடவை பெரும்பான்மை வெற்றி பெற்ற அரசியல் கட்சி மறுதடவை பெரும்பான்மையைப் பெறுவது இல்லை 194 -ஆம் ஆண்டில் இருந்து 1977-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தேர்தல்கள் இதனையே விளக்கி உள்ளன. இவற்றில் இருந்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஏன் பொதுத்தேர்தலை வைக்கப் பின்நிற்கிறார் என்பதை உணரமுடிகின்றது. பொதுத்தேர்தலை நடாத்தினால் தான் மீண்டும் வரமுடியாது என்பதை நன்கு உணர்ந்தே அவர் விகிதாசாரத் தேர்தல் முறையைக்கொண்டு வந்தார்.

"ஸ்ரீமாவின் அரசியல் உரிமைகளைப் பறித்து தனக்கெதிராக நின்று போட்டியிடக் கூடிய வேட்பாளர் இல்லாத சந்தர்ப்பத்தை ஏற்படுத்திய பின்னரே ஜனாதிபதித் தேர்தலையும் நடாத்தினார்.

(7-ம்பா பக்கம் ரீக்க)

## மணிவாக்கு

சற்றவர்களுக்கு வழிகாட்டுவது சுலபம்; மந்தை போல் மேய்ப்பது கடினம். அவர்களை ஆள்வது சுலபம்; அடிமைப்படுத்துவது கடினம்.

— புறூம் பிரபு

# நமது நோக்கு

## வெளிக்கிட்டு வாக்களியுங்கள்

பகிஷ்கரிப்பதா பங்கு பற்றுவதா என்ற தர்ம சங்கடம் நாளை நடைபெறும் சர்வஜன வாக்கெடுப்புக்குத் தடையாக இராது. விளக்குக்கோ பானைக்கோ மக்கள் வாக்களிக்கும் முக்கியத்துவம் இன்றளவில் தெளிவாகின்றது

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி ஏன் பங்குபற்றவில்லையென்பது சோதிட நிபுணருக்கே விளங்கும். கூட்டணியினரின் கட்டளையை மீறி வாக்களித்தவர்கள், தமிழ் மக்கள் அரசியல் சிந்தனைத் திறனுடையவர்களென்பதை நிலைநாட்டி விட்டதாகக் கருதப்பட்டனர். பகிஷ்கரித்தவர்களும் வாக்களித்திருப்பின் நிலைமையில் வேறுபாடு ஏற்பட்டிருக்கும்.

இன்று அவ்வித சூழ்நிலை நாடனைத்திலும் காணப்படவில்லை. எனவே வெட்டு ஒன்று துண்டு இரண்டாகும் பாங்கில் வாக்காளர் தங்கள் முக்கிய கடமையை நிறைவேற்ற முன்வருவார்களென நினைப்பது தவறாகாது

பிரசாரம் விபசாரமோ என்று எண்ணுமளவிற்கு வானளாவி விட்டது விடயம் சுலபமாகத் தோன்றினாலு, உள்ளுடன் சிக்கலானது அரசியல் தில்லுமுல்லுகள் அறியத அப்பாவி மக்கள் நிலையில் எடுபடும் தன்மை உடையவர். தங்கள் சொந்த நலத்தின் அடிப்படையில் தேசிய விடயங்களுக்குத் தீர்வுகாணும் பழக்கமுடையவராவது இயல்பு.

இருப்பினும் இந்தப் பாமர மக்களின் தீர்ப்பே ஜனநாயக ஆட்சியின் முக்கியமானது.

அரசியல் வாதிகளால் ஏமாற்றப்பட்டாலும் அந்த ஏமாற்றம் நடைபெற்றே தீரவேண்டும். பட்டுப்பட்டுத்தான் குடியானவன் ஆட்சிபுரியப் பழகவேண்டும்.

இந்த முழுப் பூசினிக்காயை சோற்றுக்குள் மறைக்கும் வகையில் பிரசாரம் நடைபெறுவதுபற்றி மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

தினந்தோறும் கட்சி மாறும் சந்தர்ப்பவாதிகள் கொடுக்கும் விளக்கத்தைப் பார்த்தால், ''பாராளுமன்றத்தில் என்ன இருக்கிறது? என்ற கேலிப்பேச்சு உதயமாகும்.

''பலமான பாராளுமன்றம் என்பது எதிர்க்கட்சியின் தலைவலி அறாது''— இது ஒருவித வியாக்கியானம்.

''ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் ஆட்சி மாறுவதால் நாட்டுக்கு இதுகாறும் நடந்ததென்ன?'' என்பது இன்னொரு பரிகாசப்பேச்சு.

இக்கேள்வியை இன்று எழுப்புகிறவர்கள், தாங்கள் ஆதரிக்கும் கட்சியின் கடந்த சாதனைகளை பட்டியல் பண்ண மறப்பதில்லை; முரண்பாட்டை உணர்வதில்லை.

கடந்த 35 வருட காலங்களில் சுதந்திர இலங்கை 'சும்மா' இருந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை; தேர்தலில் ஆட்சிமாற்றம் கண்டது வாக்காளர்களின் முதிர்ந்தறிவே!

பாராளுமன்ற ஆட்சியின் மேன்மையை இலங்கை உலகுக்கெடுத்துக்காட்டும் வகையில் அது செயற்பட்டதென்ற பேச்செல்லாம் போச்சா?

இன்று பாராளுமன்றம் ஒரு சட்டம் அமைக்கும் சபை என்றும்; அங்கு உருவாகும் சட்டங்களெல்லாம் ஜனாதிபதியின் ஆசிபெற்ற சட்டமூலமும், அவருடைய கட்சியின் பெரும்பான்மை வாக்கால் நினைத்தபோதெல்லாம் நிறைவேற்றக்கூடிய சட்டங்களை என்றுமிருக்கும் நிலையென்றும் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

எதனையும் அனுபவ ரீதியாகப் புரிந்துகொண்டால், இந்த ஆட்சி நீடிக்கவேண்டுமா அல்லது பொதுத்தேர்தல் நடக்கவேண்டுமா என்பதை முடிவுகட்டல் கடினமான நல்ல கட்சி சார்பற்ற முடிவே ஏது.

எது எவ்வாறாயினும், சுய சிந்தனையுடன் விடயத்துக்கு முடிவு கண்டு வாக்களிப்பதே முக்கியம். நமக்கென்ன என்றிருந்தால் நம்மைப் பாதிக்கும் பேராபத்துக்கு பொறுப்பானவர்களாவோம்.

# பாவைநோன்பு

பாரதநாட்டிலும் அதன் அயல் நாடுகளான இலங்கை, பர்மா, தென்கிழக்காசிய நாடுகள் என்னும் பெரும் பிரதேசங்கள் எங்கும் மிகப் பழைய காலத்திலேயே பாவை நோன்பு சைவசமயத்தவரின் பண்பாட்டுப் பணடிகையாக நிலவி வந்துள்ளது.

சங்ககாலத் தமிழர் வாழ்வில் மார்கழி நீராடல் என்பது தைநீராடலாகவும் வழங்கி வந்தது விடியற் காலையில் துயிலெழுந்து நீராடிய வழக்கம் பழைய இலக்கியங்களில் படிக்கக்கூடியதாயுள்ளது

''தையில நீராடிய தவம் தலைப்படுவ யோ'' என்று கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை என்னும் நூல் பாடுகிறது. இதே பாணியில் ''நறுவிலயம் பான் மகளிராடும தைஇத் தண்கயம்'' என்று ஐங்குறு,நூறு நூலில் வருகிறது.

### மார்கழி மாதத்துத் திருவாதிரைநாள்

மார்கழி மாதம் மகத்தான மாதம். இது வைகறைப் பொழுது போன்றது. நித்திரை விடெழுந்து காலைக் கடன்கள் செய்தபின் இறை வழிபாட்டுக்கு உகந்த காலம். திருவாதிரை என்பது ஆதிரை எனனும் நட்சத்திரததைச் சிறப்பித்துக் கூறும் பெயர்

### க.சி. குலரத்தினம்

முழுமுதற் கடவுளாய சிவபெருமானைக் குறிப்பதற்கு வானில் உள்ள பெரிய நட்சத்திரமாகிய ஆதிரையை உவமானமாகக் கொண்டனர். சிவனை ஆதிரையான், ஆதிரையான் என்று அந்தரங்க பக்தியிற் பாடித் துதித்தனர் அக்காலத் தமிழர்.

### பத்து நாள்கள்

மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளுக்கு முன்வரும் ஒன்பது நாள்களும், திருவாதிரைநாளும் சேர்ந்த பத்து நாள்களும் பெருவிழாவுக்கான திருநாள்களாகும். இந்நாள் திருவெம்பாவைக் காலமென்று வழங்குவர் இருளாகிய ஆணவ மலநீக்கத்துக்குத் திருவருள் துணைவேண்டும். திருவருளை வேண்டி மூழ்கு நாத் திரளாய குளத்தில் நீராட வருக என்பர். மலவிருள் உற்று உறங்காமல், மன்னுபரிபூரண அருள் வெள்ள முழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை'' என்பது திருப்பெருந்துறைப் புராணம்.

### திருவெம்பாவை

மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய இருபது பாடல்களைக் கொண்ட பதிகம் திருவெம்பாவை எனப் பெயர் பெற்றுள்ளது. இது திருவண்ணாமலை என்னும் திருத்தலத்தில் அருளப்பெற்றதாகும் ஒவ்வொரு பாடலின் ஈற்றடி எம்பாவாய் என்று முடிவுறுங் காரணத்தால் இப்பதிகம் திருவெம்பாவை எனப் பெயர் பெற்றுள்ளது. இது ஞானமயமானது.

### சத்தியை வியந்தது

இறைவனோடுபிரிப்பின்றிநிலவும் சத்தி திருவருளாகும். திருவெம்பாவை திருவருளைப் புகழ்ந்த பாடல்களாகும். திருவருள் பெற்ற பின்னரே இறைவனை அறிவோ அடையவோ கூடுமாகையால் திருவருளை போற்றுதல் வணங்குதல் அவசியமாகிறது. இதனால் இறைவனை அம்மையப்பன் வடிவில் அர்த்தநாரீஸ்வரராக வழிபடுதல் முறையாயிற்று பரை வழிபாடாகப்பழகிவருவதாயிற்று.

(தொடரும்)

# மக்கள் கருத்து

## அமைதியான புரட்சியே ஜனநாயகம்

ஜனநாயகநாடுகளில் பொதுவாக ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை ஒரு அமைதியான புரட்சியை வாக்காளர்கள் ஏற்படுத்தவேண்டுமென்பதே ஜனநாயகக்கொள்கை.

இலங்கையில் பன்னிரண்டு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் உள. இக்கட்சிகள் பொதுத்தேர்தல் இடைத்தேர்தல் இவைகளையே நம்பி இயங்குகின்றன. 1978-ம் ஆண்டு அரசியல் சாசனம் இடைத்தேர்தலை ஒழித்துவிட்டது இதனால் ஜனநாயகம் பாதிக்கப்பட்டது

1977-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி 1989-ம் ஆண்டுவரை பொதுத் தேர்தல், இடைத்தேர்தல் இவைகளை நடாத்தாமல் ஆட்சிசெய்ய விரும்புமானால் ஆட்சிசெய்யுமானால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய ஒன்பது கட்சிகளும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம்பெற முயற்சி செய்யும் வாய்ப்பினை இல்லாமல் செய்துவிடும். அதுமாத்திரமல்ல இப்பொழுது பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெற்ற கட்சிகள் தமது தற்போதய செல்வாக்கை மதிப்பிடமுடியாமல் போய்விடும்.

டாக்டர் ஆ. தர்மலிங்கம்

காரைநகர்.

## மானிடராதல் அரிதா?

எத்தனை பிறவிகளைத் தாண்டி மனிதராய்ப் பிறக்க வேண்டுமென்பதல மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகமும் இன்றைய விஞ்ஞானிகளின் உயிரியல் முடிவுகளும் ஒத்துப்பட்டிருக்கின்றன.

பகுத்தறியும் பேராற்றல் மட்டுமல்ல அதற்குமேலான உள்ளுணர்வுகளை விருத்தி செய்யும் ஆத்மீக ஆற்றலும் மனிதப் பிறவிக்கு மகத்துவம் அளிக்கின்றன; இதற்குச் சான்று பகர்பவர்களை நாம் கண்டும் கேட்டும் அறியும் மானிட தெய்வங்கள்.

இந்த நிலையில் மன்னுயிரை மாய்ப்பது கொலைக் குற்றம்; மாபாதகம், தன்னுயிரை மாய்ப்பதும் அத்தகையதே!

காதலில் விரக்தி, பரீட்சையில் தோல்வி, பெற்றோர் மற்றோரின் கண்டிப்பு, போன்ற அற்ப காரணங்களே இன்று அதிகரித்து வரும் தற்கொலைக்குத் தூபமிடுகின்றன; மிக மோசமான காரியம் இது

சமுதாயத்தின் சீர்கெட்ட நிலையே வாழும் வளரும் இளம் பிள்ளைகளின் உயிர்களைக் கவரும் காலனாகி வருகின்றது.

குறிப்பிட்டமானிப்பாய்ச் சம்பவத்தை எவ்வென்று சொல்வது?

உயிர் வாழ வேண்டுமாயின், சமுதாயத்தின் உயர் மட்டத்தை எட்டிப் பிடிக்க வேண்டும்; டாக்டர், எஞ்சினியர், கணக்காளர்: இந்த எல்லைக்கு வெளியே வாழ்வதன் பயனென்ன?

இதுவே சமூகத்தை — சிறப்பாக இன்றைய தமிழ் சமூகத்தை பீடித்திருக்கும் புற்று நோய்.

இதுவே இன்று நடைபெறும் எலி ஓட்டத்துக்கு (Rat Race) முதற்காரணம்; முடிவு ஆபத்து.

தோல்விக்கு மருந்து மிக எளிதில் கிடைக்கும் கிருமிநாசினி.

சமய அடிப்படையில், ஆத்மீக மூலவேரில் வாழ்க்கை அமைந்தால் இத்தகைய திசை திருப்புவது இலகுவானதல்ல.

பெற்றோர்களே, பெற்றோர்கள், ஆசிரியர்கள் சிந்திப்பார்களாக! மூதாட்டியின் கூற்றை மெய்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

## திருவெம்பாவை பூசை

(யாழ்ப்பாணம்)

திருவெம்பாவைப் பூசை இன்று முதல் யாழ்ப்பாணம் ஸ்ரீ செந்தில் கதிர்வேலயுத சுவாமிகோவிலில் காலை 5-00 மணிக்கு அபிஷேகமும், 5-30 மணிக்குபூஜையும் தொடர்ந்து திருவாதவூரடிகள் புராண படனமும் நடைபெறும் 30-ம் திகதி வியாழக்கிழமை திருவாதிரையன்று காலை 5-30 மணிக்கு விசேஷ ஸ்நபனாபிஷேகம்

(5-ம் பக்கம் பார்க்க)

## விநாயகர் தோத்திரம்

திருமுறை கண்டாய் போற்றி
திருவருண் மலையே போற்றி
குருமுறை கொண்டாய் போற்றி
குவலயங் காப்பாய் போற்றி
பெருமறை யிறைபே போற்றி
பேதகஞ் செய்வாய் போற்றி
அருமறை யருளுவாய் போற்றி
ஐங்கரா போற்றி போற்றி

வேண்டுவ தறிவாய் போற்றி
விக்கினந் தீர்ப்பாய் போற்றி
தீண்டுதற் கரியாய் போற்றி
தீனரைக் காப்பாய் போற்றி
காண்டலில் கனியே போற்றி
கணங்களின் பதியே போற்றி
ஆண்டருள் புரிவாய் போற்றி
ஐங்கரா போற்றி போற்றி

- ச. தங்கமாமயிலோன்

★ ★ ★ ★

## குணநிதி! கணபதி!! பதமலர் பணிவனே!!

முழவினை நிகர்த்த வயிறினை உடையவர்
துளையினை உடைய துதிக்கை உடையவர்
கழல்கள் ஒலிக்கும் இருபதம் உடையவர்
உழல்கிற மனங்களுக் கருமருந் தளிப்பவர்!

நெடுத்த மலைதனில் கதையைப் பொறித்தவர்
ஒறுத்த அசுரனின் வலியினைக் கெடுத்தவர்
ஒடித்த மருப்பினைக் கரத்தில் தரித்தவர்
நினைத்த கணத்தினில் அருகினில் வருபவர்!

பணிந்து குனிந்து வழிபடு மவரிடர்
தணிந்து நலிந்து அழிபட அருள்பவர்
நினைந்து தொடங்கும் எதனையும் அருள்பவர்
புனைந்து சூட்டுமென் கவிகளில் திகழ்பவர்!

தலையினில் மதிநதி உடையவர் தலைமகன்
மலைமகள் உமையவள் அருளிய திருமகன்
குறமகள் உளம்மகிழ் முருகனின் முன்னவன்
குணநிதி கணபதி பதமலர் பணிவனே!

- முருகு

# "தீயசக்திகள் மீது விழிப்பாக இருங்கள்"

## யாழ். கூட்டத்தில் அமிர்தலிங்கம்

(யாழ்ப்பாணம்)

'ஜனாதிபதி தேர்தலின் போதுசிலதீயசக்திகள்கடைசிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமது இயக்கத்தின் பெயரைக் குறிப்பிட்டு-துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு எமது இனத்தைத் திசைதிருப்பியதுபோல் நடைபெறவிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பின்போதும் அச்சக்திகள் சில சதி முயற்சிகளில் ஈடுபடலாம், இத்தீயசக்திகள் மீது எமது இளைஞர்களும், தொண்டர்களும் விழிப்பாக இருக்கவேண்டும்'' என்று எதிர்க்கட்சி முதல்வரும், தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு அ. அமிர்தலிங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்த்து யாழ் திறந்தவெளி யரங்கில் நடைபெற்ற இறுதிப்பிரசாரக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் உரைநிகழ்த்தினார்.

தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவரும் நல்லூர் எம். பி யுமான திரு எம். சிவசிதம்பரம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது

திரு அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணியைச்சேர்ந்த பிரதிநிதிகளுக்குஜனாதிபதிதிரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா அல்ல; தமிழ் பேசும்மக்கள்தான் எஜமானர்கள். ஆதலால் எமது இனத்தைக் கூறுபோடும் முயற்சியில் திரு குமார் பொன்னம்பலம் போன்றவர்கள் ஈடுபடவேண்டாம் என்று தயவாகக்கேட்டுக் கொண்டார்.

### ரங்காவுக்குப் பதில் அப்புஹாமி

' ஜனாதிபதி அவர்கள் தமது கட்சியைச் சேர்ந்தஉறுப்பினர்கள் 145பேரிடமும் கையெழுத்தில்லாத இராஜினாமாக்கடிதங்களை வாங்கி தமது பொக்கட்டில் வைத்துக்கொண்டு, சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவாக வேலைசெய்யுங்கள் என்று விரட்டுகிறார். அவர்களும் சவுக்கால் அடித்த குதிரை போல மிரண்டுகொண்டுவேலை செய்கிறார்கள்

அரசு வெற்றியீட்டினால் பொத்துவில்தொகுதிக்குக்கூட திருமதி ரங்கநாயகி பத்மநாதனுக்குப் பதிலாக அவர் ஒரு அப்புஹாமியை நியமிக்கலாம்; இந்த முடிவை கடவுளாலும் மாற்றமுடியாது என்று சொன்னார்.

### திரு. யோகேஸ்

யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது:

''ஆட்சியினர் எதையும் சொல்லலாம் எதையும் செய்யலாம் என்னைப்பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு எதுவிதத்திலும் அகௌரவமோ அவமானமோ ஏற்படும் விதத்தில் தலைகுனிந்து எதுவித செயற்பாடுகளிலும் நான் ஈடுபடவில்லை.

திரு யோகேஸ்வரன் பேச எழுந்தபொழுது இளைஞர் ஒருவர் திடீரென மேடை மீது ஏறி தனது விரலைக்கீறி இரத்த திலகம் இட்டார். மேலும் ஒருவர் இரத்ததிலகம் இடமுயற்சித்த பொழுது திரு யோகேஸ்வரன் அவரைத் தடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பிவைத்தார்.

''திரு யோகேஸ்வரன் தொடர்ந்து பேசினார்

''பயங்கரவாதின் பாராளுமன்றம் செல்ல அனுமதிக்கக்கூடாது என்று ஜனாதிபதி சொல்கிறார். இது விஷயம் குறித்து தீர்மானிப்பது ஜனாதிபதியல்ல பொதுமக்கள் தான்

பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவோர் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது என்று குறிப்பிட்ட திரு யோகேஸ். இதற்கு ஒரு முடிவை நாங்கள் எடுக்கவேண்டுமானால் பொது சன வாக்கெடுப்புக்கு எதிராக வாக்களித்து பொதுத் தேர்தல் நடாத்த ஆணையிட வேண்டும்.

சர்வாதிகாரத்தின் சின்னம் விளக்காகவும், ஜனநாயகத்தின் சின்னம் பானையாகவும் இருக்கிறது ஆதலால் ஜனநாயகத்தின் சின்னமான பானைக்கு நேரே நீங்கள் புள்ளடி போட்டு சர்வாதிகாரத்தை முறியடிக்கவேண்டும்.''

### கரிகாலன்

சட்டத்தரணி எஸ். நவரத்தினம் (கரிகாலன்) பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழினம் அடிப்படை உரிமைகளை அழிய விடக்கூடாது. தமிழினத்தின் குரல்தான் பானைச்சின்னம்

''ஜனநாயகக் கோட்பாடுகளை அபிவிருத்தி அடையச் செய்வதற்கு, தமிழீழ சுதந்திரப் போராட்டம் நடத்துவதற்கு, வேகமாகச் செயல்படக் கூடிய அமைப்புகள் தேவை.

''இந்த நாட்டின் ஜனநாயக அமைப்பை ஜனாதிபதி திரு. ஜே, ஆர் ஒரு போலி அமைப்பாக வைத்திருக்கிறார். இந்த ஆட்சியாளரின் சர்வாதிகார-எதேச்சாதிகார நடவடிக்கைகளை முறியடிக்க பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும்.

### குட்டிமணி விரும்பவில்லை

''பாராளுமன்றம் செல்ல குட்டிமணி விரும்பவில்லை; எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களை உலகத்துக்கு எடுத்துக்காட்டவே தமிழர்விடுதலைக்கூட்டணி குட்டிமணியை எம். பியாக நியமித்தது.

### திருமதி அமிர்

திருமங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில், திருமதி சிறிமா பண்டாரநாயக்க தனது ஆட்சியை இரு வருடங்களுக்கு நீடித்தபொழுது அதை அநியாயம்-அக்கிரமம் என்று கூக்குரலெழுப்பிய திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனா தமது ஆட்சியை 6 வருஷம்நீடிக்க பொதுசனவாக்கெடுப்பு நடாத்துகிறார்'' என்றார்.

உடுப்பிட்டி எம் பி திரு இராசலிங்கம், சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம், யாழ் மாநகரமுதல்வர் திரு இராசா விசுவநாதன், சட்டத்தரணி திரு நீலன் திருச்செல்வம் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். மா)

## மானிப்பாயில் இன்று சாயி விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலயம் இன்று தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது.

இன்று மாலை மானிப்பாய் 'சாயி ஆலயத்தில்' இவ் விழா நடைபெறும். விசேடவழிபாடுகள், பஜனை, மாணவரின் கலை நிகழ்ச்சிகள் என்பன முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறும்.

எதிர்வரும் 23-ம் திகதி நிலையத்தவரின் பெற்றோர் தின விழா நடைபெறவுள்ளது இவ் விழா மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள ஸ்ரீ சக்தி இல்லத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை பாலவிகாஷ் மாணவரின் கைப்பணிப்பொருட் கண்காட்சியும் நடைபெறும் வைத்திய கலாநிதி செல்விஸ்ரீ பொன்னுத்துரை இக்கண்காட்சியைத் திறந்துவைப்பார்.

### திருவெம்பாவை ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மும் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜை, திருவிழவும் நடைபெறும் திருவாதிரையடிகள் பூரணபடனம் பூர்த்தியகும்.

## நம்மவர் கம்பியூட்டரில் கலாநிதி

(கரவெட்டி)

இங்கிலாந்திலுள்ள புருனல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு மு சிறீதரன் கம்பியூட்டர் விஞ்ஞானப் பாடநெறியில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பயின்று உயர் கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மின்பொறியியல் பட்டதாரிப் பட்டத்தைப் பெற்றார் அதையடுத்து அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மின்பொறியியல் பீட விரிவுரையாளராக 19 5ம் ஆண்டு வரை கடமையாற்றினார்

இங்கிலாந்தில் யு எம். ஐ எஸ் ரீ பல்கலைக்கழகத்தில் அவர் விஞ்ஞான முதுமாணிப்பட்டம் பெற்றார். திறமையான சித்தி பெற்றதனால் இவருக்கு இங்கிலாந்து கைத்தொழில் திணைக்களம் புலமைப்பரிசிலை வழங்கி கௌரவித்தது

கலாநிதி சிறீதரன், முன்னாள் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளரும், கரவெட்டி மத்தி கிராமோதய சபைத்தலைவருமான திரு. இ முத்துத்தம்பியினதும், கடடைவேலி ஞானாசாரியர் கல்லூரி சங்கீத ஆசிரியை சங்கீதபூஷணம் திருமதி சுந்தரேஸ்வரி முத்துத்தம்பியினதும் மூத்த புதல்வராவார்.


## வடமராட்சியில் 19 பாடசாலைகள் புனரமைப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள 19 பாடசாலைகள் அடுத்த ஆண்டு முதல் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன இதற்கான நடவடிக்கைகளை யாழ் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது

இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று யாழ் கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை பிரதம கல்வி அதிகாரி திரு வெ சபாநாயகம், கல்வி அதிகாரி திரு கே பொன்னம்பலம் ஆகியோர் தலைமையில் தாளையடி றோ. க. பாடசாலையில் நடைபெற்றது

## தேசிய ஜம்போறிகளில் யாழ். இந்துசாரணர் சாதனை



ரவிக்குலன் ராகவன்

(யாழ்ப்பாணம்)

(ஈ.ரவிக்குலன்)

இம்மாதம் 24-ம் திகதி வட இந்தியாவில் புத்தகாயா என்னுமிடத்தில் நடைபெறவிருக்கும் 9-வது தேசிய ஜம்போறியில் கலந்து கொள்வதற்காக 23-ம் திகதி இந்தியா பயணமாகின்றார். செல்வன் ஈ ரவிக்குலன், இலங்கையிலிருந்து செல்லும் 24 சாரணர்களுள் ஒருவராவார் இவர் சாரணர் நாடாவைப்பெற்று கனிஷ்ட சாரணர் அணித்தலைவராகவும் இருந்து வருகின்றார்.

(இ. ராகவன்)

அவுஸ்திரேலியாவில் இம்மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகும் 9-வது தேசிய ஜம்போறியில் கலந்து கொள்வதற்கு இலங்கையிலிருந்து 26-ம் திகதி பயணமாகின்றார் செல்வன் இ. ராகவன் இலங்கையில் இருந்து செல்லும் நால்வரில் ஒருவராவார்: இவர் சாரணர் நாடாவைப்பெற்று கனிஷ்ட சாரண அணித்தலைவராகவும் இருந்து வருகின்றார்.

கடந்த அக்டோபர் மாதம் ஜப்பானில் நடைபெற்ற தேசிய ஜம்போறியில் இக்கல்லூரியைச்சேர்ந்த க செந்தில்குமரன் கலந்து கொண்டு நாடு திரும்பியது குறிப்பிடத்தக்கது. ஒரே கல்லூரியைச் சேர்ந்த மூன்று சாரணர்கள் வெவ்வேறு நாடுகளின் தேசிய ஜம்போறியில் ஒரே வருடத்தில் கலந்து கொள்வது ஓர் சாதனையாகும், யாழ்-இந்து சாரணர் குழு யாழ், மாவட்ட போட்டியில் கடந்த வரும் தொடர்ந்து பத்தாவது வருடம் முதலாம் இடத்தைப் பெற்ற ''றோட்டறி'' சுற்றுக்கேடயத்தைத் தமதாக்கிக் கொண்டதும், இவ்வருடம் நடைபெற்ற போட்டியில் [illegible] இடத்தைப் பெற்று பதினோராவது தடவையாக முன்னணியில் இருப்பதுடன் அகில இலங்கைரீதியில் சிறந்த குழுவாகக் கணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது

## யாழ். எம். பி.க்கு ஒரு 'வேதனை'!

(பண்டத்தரிப்பு)

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தங்கள் சங்கக் கட்டிடங்களை நல்ல முறையில் பயன்படுத்தி கிராமத்தின் வளர்ச்சிக்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டும். பெரும் பணச் செலவில் நிறுவப்பட்டுள்ள கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடங்களில் பல கட்டாக்காலி மாடுகளின் இருப்பிடங்களாக இருந்து வருகின்றன என்பதை நான் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக அவதானித்து மிகவும் வேதனைப்பட்டேன். இச்சங்கத்தினர் முன்மாதிரியாக திகழ்ந்து இக்கட்டடத்தில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.''

இவ்வாறு வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் யாழ்ப்பாணத் தொகுதி எம். பி திரு வே. யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவரும், கிராமோதய சபைத் தலைவருமான திரு இ செல்வரத்தினம் ஜே பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மறைந்த வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி. அமரர் திரு நவரத்தினம் உருவப்படத்தை திரு. யோகேஸ்வரன் சங்க மண்டபத்தில் திரை நீக்கம் செய்து வைத்தார்.

திரு. யோகேஸ்வரன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உள்ளூர் மூலப் பொருட்களை பயன்படுத்தி சிறு கைத்தொழில்களில் ஈடுபட வேண்டும். பனையோலைப் பயிற்சி, தையல் பயிற்சி போன்ற பயிற்சிகளை தொழில் திணைக்களத்தின் ஆதரவுடன் ஆரம்பித்து நடத்தலாம், இதன் மூலம் படித்து வேலையற்று இருக்கும் யுவதிகள் பெரும் பயனைப்பெறமுடியும். இத்தொகுதி அலுவல்களை கவனித்து வரும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் இதற்கு தேவையான சகல ஒத்துழைப்பையும் வழங்குவேன் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.''

### யாருடையது

திரு வி. எஸ். பொன்னுத்துரை என்பவர் யாழ் பலசாலை வீதியில் ஒரு அடையாள அட்டையை கண்டெடுத்தது. ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர்கள் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வை ஜே. ஆரே காணமுடியும்''

## —அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

''நாடு தன்னுடைய தலைவிதியை நிர்ணயிக்கத் தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் விவேகத்துடனும் ...பாய உணர்வுடனும் எமது ...ப்பை வழங்குமாறு நாம் ...ரப்பட்டுள்ளோம். இம் ...தம் 22-ம் திகதி நாம் ...க்கவிருக்கும் முடிவு கடந்த ...ல அனுபவங்களின் பின்ன...யின் தாக்கத்தில் எடுக்கப்பட்டதாகவோ அல்லது ...தாரீத்த ரீதியாக எடுக்கப்பட்டதாகவோ இருந்தாலும் ...ன்றைய சந்ததியினரை மாத்திரம் அல்லது எதிர்கால சந்ததியினரையும் பாதிக்கும் என்பதை மறுக்க முடியாது. எனவே எதிர் காலத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தக் கூடிய ...லா [illegible] ...க்கு எடுத்துக் கொண்டே ...ம் ஒரு முடிவுக்கு வரவேண்டியுள்ளது''

...சாவசன அபிப்பிராய வாக்கெடுப்பு பற்றி இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான திரு ...ஸ். தொண்டமான் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''ஒவ்வொரு அரசினதும் பதவிக் காலம் முடிய முடிய அரசாங்கங்களை மாற்றி அமைப்பது தான் இந்நாட்டின் அரசியல் சரித்திரம். அப்படியான மாற்றம் அவசியம் தானா இல்லை ...சுதந்திரத்திற்கும் பின் ...ருவான ஒரு சம்பிரதாயத்தை மக்கள் தொடர்கிறார்களா? என்பது விவாதத்திற்குரிய விஷயம். ஆனால் இத்தகையமாற்றம் நாட்டிற்கு ...மையை அளித்ததா? நாட்டில் அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தியதா? என்றெல்லாம் கேட்டால் இல்லை என்றே எவரும் கூறுவர்'' என்று தெரிவித்துள்ள அமைச்சர் எஸ். தொண்டமான் தமது அறிக்கையில் மேலும் கூறியதாவது:

''தேர்தல் வெற்றிக்காக ...ன வெறுப்பை கட்சிகள் தூண்டி விட்டதால் ஏற்பட்ட ...னக்கலவரங்களின் ...ற ...நாட்டின் சரித்திரத்தில் அவ்வப்போது படிந்திருப்பதை நாம் காண முடிகின்றது இதனால் நாட்டு முன்னேற்றம் தடைப்பட்டது. முன்னைய அரசாங்கங்களின் அபிவிருத்திப் பணிகளை குறைகூறுவதிலேயே அடுத்தடுத்துப பதவிக்கு வந்த அரசாங்கங்கள் நேரத்தை செலவளித்தன. அதே மாதிரி நாம் திரும்பவும் செய்து கடந்த ஐந்து வருடங்களில் நாம் அடைந்த அபிவிருத்தியையும் முன்னேற்றத்தையும் சூனியமாக்கப் போகின்றோமா? அல்லது முன்னேற்றமும் சுபிட்சமும் தொடர அனுமதிக்கப் போகின்றோமா? என்று நாம் இப்போது முடிவெடுக்க வேண்டும்.

''சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பு ஜனநாயகத்துக்கு அடிக்கப்படும் சாவு மணி எனப் புலம்புவோர் சிலர் இந்நாட்டில் உண்டு. அடுத்த ஆறு ஆண்டு காலத்துக்கு அரசாங்கத்தின் பதவியை நீடிக்க மக்கள் வாக்களிப்பார்கள் என அவர்கள் முடிவெடுத்து விட்டார்கள் போல் இருக்கிறது. இல்லாவிடில் பொதுத் தேர்தல் வேண்டுமா, வேண்டாமா என அறிவதற்காக நடாத்தப்படும் சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்புசுதந்திர தேர்தல் [illegible] முடிவு ...ன அவர்கள் அஞ்சத் தேவை இல்லை.

''திரு. ஜயவர்த்தனவை நாட்டின் ஜனாதிபதியாக அக்டோபர் 20 ம் திகதி தேர்ந்தெடுத்து மக்கள் அவருக்கு அளித்த மகத்தான அங்கீகாரத்தை அடுத்து இயற்கையாகவே எழக் கூடிய முடிவு தான் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்க எடுத்த முடிவு. ஜனாதிபதியினுடைய கொள்கைகளையும் திட்டங்களையும் தொடர தேவையான பாராளுமன்ற ஆதரவை அவருக்கு அளிக்க வேண்டியது அவசியமாகும்.

''பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்க மக்களின் அங்கீகாரத்தைக் கோருவது இலங்கைக்கு புதிதாக இருந்தாலும் பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிக்கும் செயல் இலங்கைக்கு புதியது ஒன்றல்ல. அமைச் காலமாகிய 1975-இ கூட அன்றைய அரசாங்கம் தன்னுடைய பாராளுமன்ற [illegible] பான்மையைப் பக்க பலமாக வைத்துக் கொண்டு [illegible] டைய உரிமையை உதாசீனப் செய்து பாராளுமன்ற [illegible] காலத்தை நீடித்துக் கொண்டது. அன்று அதை எதிர்த்து குரலெழுப்பியவர் அன்றைய எதிர்க்கட்சி தலைவராய் இருந்த திரு. ஜயவர்த்தன அவர்களே மூன்றில் இரண்டு பெரும்பான்மை மட்டுமல்ல பாராளுமன்றத்தில் நூற்றுக்கு நூறு பெரும் பான்மை இருந்தாலும் கூட பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிக்க முடியாது என வாதிட்டார். அப்படி நீடிப்பதற்கு மக்களுடைய அங்கீகாரம் பெற வேண்டும் எனக் கூறி தன்னுடைய பாராளுமன்ற பதவியில் இருந்தும் ராஜிநாமச் செய்தார், அந்தக் கொள்கையை உறுதிப்படுத்துவதற்காகத் தான் பாராளுமன்ற பதவிக்கால நீடிப்பு போன்ற பாரதூரமான மாற்றங்கள் தேவைப்படும் போது மக்களுடைய அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென புதிய அரசியல் சாசனத்திலே ஒருசரத்தைஅவர் புகுத்தினர்.

''ஜனநாயகத்துக்கு ஆபத்து நேர்ந்திருப்பதாக அழுது புலம்பி கொள்கைகள் பற்றி இன்று கூக்குரல் எழுப்புவோர் அன்று வாய் மூடி மௌனமாக இருந்தனர் தம் பதவிகளைத் துறக்கத் தயாராய் இல்லை.

''இதில் வேடிக்கை என்னவென்றால், கடந்த வருடம் இந்த நாடு சர்வஜன வாக்கின் 50-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. கடந்த 50 வருடங்களாக இந்நாட்டு மக்கள் அனைவரும் வாக்குரிமையை அனுபவிப்பதாக உலகுக்கு பறை சாற்றினர்கள். ஆனால் இந்த 50 வருடங்களில் 33 வருடங்களாக ஜனநாயகத்துக்குப் புறம்பான முறையில் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ள 10 லட்சம் இந்திய வம்சாவளி உழைப்பாளிகளை அவர்கள் மறந்துவிட்டார்கள். இன்று ஜனநாயகம் பேசுபவர்கள் அன்று இந்திய வம்சாவளி மக்களை புறக்கணித்து ஜனநாயகத்துக்கு விரோதமாக நிறுவப்பட்ட பாராளுமன்றத்தில் பதவி வகித்தனர்.

''இத்தகையதோர்பின்னணியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்பேசும் மக்களின் போக்கு எமக்கு திகைப்பை உண்டாக்குகின்றது.

''இதுவரை கிட்டாத, ஒரு சந்தர்ப்பம் தற்போது கிடைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தை முறையாக உபயோகித்துக் கொண்டோமானால் தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும். சிறுபான்மையினரின் பிரச்னைகள் மீது இரக்கத்தையும் அனுதாபத்தையும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன காட்டுகிறார். சம்பிரதாயங்களை தகர்த்தெறிந்து தமிழ்த் தலைவர்களோடு பேச்சு வார்த்தைகளை தன் கொள்கைக்கேற்ற துணிவுடன் அவர் ஆரம்பித்துள்ளார்.

''இந்த சந்தர்ப்பத்தை நாம் நழுவவிடுவோமானால் எதிர்கால சந்ததியினரைப் பெரும் இழிவுக்குள் தள்ளி அவர்களின் சாபக்கேட்டுக்கு நாம் ஆளாவோம்.

''தமிழ் பேசும் மக்கள், எங்கிருந்தாலும் விளக்கிற்குக் கட்டுக்கோப்புடன் வாக்களித்து நம்முடைய முன்னேற்றப் பாதையை ஒளிபெறச் செய்வோமாக.

# 'பெண்கள்மீது குற்றம் புரிவோருக்கு கடுந்தண்டனை'

## --ஜனாதிபதி ஜே. ஆர்.

(கொழும்பு)

'பெண்கள்மீது இழைக்கப்படும் குற்றச்செயல்களுக்கெதிராகக் கடுந்தண்டனைகள் விதிக்கப்படும்''. என்று ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவாத்தன தெஹியோவிட்டவில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்

திரு. ஜயவர்தன அங்கு மேலும் பேசுகையில், ''அண்மையில் இரத்தினபுரிப் பகுதியில் தமது கிரேகிதர்களுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மூன்று இளப்பெண்கள் இயற்கைக்காட்சியொன்றைப் பார்த்துக்கொண்டிருந்தவேளை காடையர்கள் சிலரால் இழுத்துச் செல்லப்பட்டு மானபங்கப்படுத்தப்பட்டதை நானறிவேன்.

இதேபோன்ற குற்றச்செயல்களுக்கு தற்போது விதிக்கப்படும் தண்டனைகளிலும் கூடுதலான தண்டனைகளை விதிக்க அரசாங்கம் ஆவன செய்யும்.

நாம் எமது பெண்களைப் பாதுகாக்கவேண்டும். அவர்கள்மீது மேற்கொள்ளப்படும் மிருகத்தனமான குற்றங்களை சாதாரணமானவையாகக் கருதிவிடக்கூடாது'' என்றார்.

# 'வன்முறைதலை தூக்கியதற்கு ஆட்சியாளரே காரணம்''

(மாவிட்டபுரம்)

ஆட்சியாளர் கொடுமையான சட்டங்களை இயற்றி நீதிக்கு மாறான முறையில் செயல் படுவதால் நாட்டில் வன்முறையும் தலைதூக்கியுள்ளது ஆட்சியாளர் பிரச்னைகளுக்கு அடிப்படைப் பரிகாரம் கண்டு நீதியான முறையில் ஆட்சி நடாத்துவார்களேயானால் வன்முறைகள் தானாகவே அடங்கிவிடும்''.

இவ்வாறு சைவமத பீடங்களின் ஆதரவில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் இடம்பெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்துப் பேசிய எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''சமுதாயத்தின் உயிர்நாடி நல்ல ஆட்சியேயாகும். ஆனால் ஆட்சி தவறான வழிகளில் செல்லும் போது மக்கள் சமுதாயம் அவ்வழிகளிலேயே நாட்டம் கொள்ளும் நிலை ஏற்படுகிறது இன்று நாட்டினில் பயங்கரவாதம் தலை தூக்கியுள்ளதாக ஜனாதிபதி கூறுகிறார். வடக்கு பயங்கரவாதம், ஏனைய பகுதிகளில் பயங்கரவாதம், அரசியல் கட்சியொன்றின் பயங்கரவாதம் என 3 கட்டங்களாக ஜனாதிபதியால் வர்ணிக்கப்படுகிறது. இதனை தாங்களாகவே மிகைப்படுத்தி வளர்த்து வருவதன் மூலம் எதிர்காலத்தில் சர்வாதிகாரத் ஆட்சியொன்றுக்கு வழி சமைக்க முயலுகிறார்கள்.

''இளைஞர்களில் தொடங்கி இன்று மதகுருமார், கல்விமான்கள், டாக்டர்கள்வரை கைதுசெய்தல், கொடுமைப் படுத்தல் என்பதை தொடர்கின்றன மனிதநீதிக்காகவும், மனிதஉரிமைகளை வலியுறுத்தியும் இவ்வாறான உண்ணாவிரதங்கள் நடத்தப்படுவது அவசியமானது, அத்துடன் மத வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக இவற்றை எதிர்த்து நிற்கவேண்டும்'' என்றார்.

மாவை ஆலய ஆதீனகர்த்தா மகாராஜ ஸ்ரீ சு து ஷண்முகநாதக்குருக்கள் பேசுகையில்; ''குருமாரை மதிப்பதும் பாதுகாப்பது மக்களது கடமையாகும். இதில் அரசினர்க்கும் பெரும்பங்குண்டு 1971ல் சைவமத பீடங்களைச் சேர்ந்த

[7-ம் பக்கம் பார்க்க]

# ''பொதுத்தேர்தல் என்றார்; இப்போது ஆயுள் நீடிப்பு பற்றி பேசுகிறார்!

## முன்பின் ஏன் முரண்'' என்று கேட்கிறார் 'சிவா'

(அரியாலை)

''ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றவுடன் 1983-ம் ஆண்டிற்கு முன்னர் பொதுத் தேர்தல் நடைபெறும் என்று கூறினர். இப்படிக் கூறி ஒரு வாரம் முடிவதற்கு முன்னரே பாராளுமன்ற ஆயுள் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவேன் என்று கூறினர். இப்படி முன்னுக்குப்பின் முரணாகக் கூறிய காரணம் என்ன?''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. அரியாலை மேற்கு கலைமகள் வீதியில் அரியாலை மேற்கு தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் சார்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்புக்கு எதிரான பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கூட்டணிக் கிளைத் தலைவர் திரு. ச. நடராசா தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் திரு. மு சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''1978-ம் ஆண்டுக்கும் 1982-ம் ஆண்டுக்குமிடையில் அரசியலில் காத்திரமான மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. தொகுதிக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நடைபெற்ற தேர்தல்களில் அத்தொகுதிகளின் வாக்காளர்களின் விருப்பு வெறுப்பு வெளிப்படையாகக் காட்ட வாய்ப்பு இருந்தது. இதனை மாற்றியஅரசாங்கம் மாவட்ட ரீதியாக கட்சிகளுக்கு கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கையைக்கொண்டு பிரதிநிதித்துவத்தை வழங்கும் முறையாகிய விகிதாசார முறையைக் கொண்டுவந்தது. ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு 52 சத வீத வாக்குகளே கிடைத்தன. அதனை எதிர்த்துப் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 32 சத வீதமான வாக்குகளே கிடைத்தன

1983-ம் ஆண்டில் 196 அங்கத்தவர்கள் இடம்பெறும் பாராளுமன்றத் தேர்தலில் இவர்கள் பெற்ற வாக்குகளைக்கொண்டு பார்த்தால் 100 ஸ்தானங்களைக்கூடப் பெறுவது கஷ்டமாக அமையலாம் தாம் அமுலுக்குக் கொண்டுவந்த விகிதாசாரத் தேர்தல் முறையினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற முடியாது என்ற காரணத்தினால் தான் சர்வஜன வாக்கெடுப்பை நடாத்த அரசு முடிவு செய்தது.

அரசு 1978-ம் ஆண்டில் நடைபெற்ற ஐந்தில் நான்கு பெரும்பான்மை பலத்தினால் அரசியல் யாப்பையே மாற்றியமைத்தது இந்த அரசியல் யாப்பில் செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பொத்துவில் தொகுதி அங்கத்தவர் காலஞ்சென்ற கனகரத்தினமும், மட்டக்களப்புத் தொகுதி அங்கத்தவர் திரு. செ. இராசதுரையும் கட்சி மாறவும், மந்திரிகளாகவும் வழி செய்தது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை காரணங் கூறி நீதி மன்றத்தில் ஆஜர் செய்யவேண்டுமென்ற சட்டம் இருந்தது. ஆனால் பயங்கரவாதத்தைத் தடை செய்கிறோம் என்று கூறிக் கொண்டு செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யும் ஒருவரை 18 மாத காலம் தடுத்து வைக்கவும் பயங்கரவாதச் சட்டம் இடமளிக்கிறது. ஒருவர் செய்யாத குற்றத்தை செய்ததாக ருசுப்படுத்தி நம்மவருக்குத் தூக்குத்தண்டனை விதித்திருக்கிறார்கள். எமது இனத்தை நசுக்குவதற்காகவே இச் சட்டத்தை அரசு அமுல் நடத்தி வருகிறது. உடைந்த பானையில் கஞ்சி காய்ச்சுகிறார்கள் கூட்டணியினர் என்று நண்பர் தேவநாயகம் பேசி வருகிறார். அவரைப் பார்த்து நாம் கேட்கிறோம். நீர் விளக்கில் கஞ்சி காய்ச்சுகிறீரா? எதிர் வரும் சர்வஜன வாக்கெடுப்பில் நாம் எமது கட்சி வேறுபாடுகளைமறந்து அரசுக்கு எதிராக எமது வாக்கைப் பிரயோகித்து சர்வஜன வாக்கெடுப்பை தோல்வியடையச் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி எம் பி திரு த. இராசலிங்கம் பேசுகையில், தேர்தல்களில் கட்சிகளும், வேட்பாளர்களும், சின்னங்களும் போட்டியிடும் ஆனால் இந்தத் தேர்தலில் இவைகள் இடம் பெறமாட்டாது. சர்வதிகாரத்தை எதிர்த்து பாராளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்ற நாம் அரசுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்றார்.

பருத்தித்துறை எம்.பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் ''ஆசியாவிலே நான்கு நாடுகளில் தான் மக்கள் வாக்களித்து அரசை அமைக்கும் முறை இருக்கிறது. சர்வசன வாக்குரிமையின் 50 வது ஆண்டு பொன்விழாவை1981ம் ஆண்டு கொண்டாடிய இந்த நாட்டில் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் வாக்காளர்களுக்குத் தாம் விரும்பும் அரசை அமைக்க இதுவரை இருந்து வந்த உரிமை முற்றாக மறுக்கப்படுகிறது ''என்றார். யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன், உதவி முதல்வர் திரு. அலோசியஸ், நல்லூர்த்தொகுதி கூட்டணிச் செயலாளர் திரு வெ கனகசபாபதி, அரியாலை மேற்குக் கூட்டணிக்கிளை பொருளாளர் திரு. ஆர். இராஜையா (ஜே.பி.) ஆகியோர்கள் பேசினர்.

## வன்முறை .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

குருமார் பாதுகாப்பு உதவி அமைச்சரை சந்தித்து சைவாலயங்களில் ஏற்பட்டிருந்த ஆலயப்பிரவேச நிலைமைகள் பற்றிக்கூறி பரிகாரம்தேட முனைந்த சமயம் அமைச்சர் அவர்களை உதாசீனம்செய்து, ஏளனம் செய்து எமது மதத்தினரையே புண்படுத்தினர். அன்று சைவமத குருமாருக்கு நடந்தவை இன்று கிறிஸ்தவ குருமாருக்கு நடக்கின்றன, அநீதியை தட்டிக்கேட்பது எமது கடமை, மேலும் இந்நிலையை வளரவிடாமல் சகல மதகுருமாரும் இணைந் சங்கம் அமைதது தமது நிலையை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும்'' என்றார்.

நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தைச் சேர்ந்த திரு, சிலன் கதிர்காமர், சட்டத்தரணி வி எஸ். கணேசலிங்கம் ஆகியோரும் பேசினர்.


6-வது ஜனத்திரள்வாரம்
றீகல் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
அசோகன்-நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஸ்ரீவித்யா
காலங்களில்
அவள் வசந்தம்

சாந்தி (யாழ். நகர்)
19—21 மட்டும்
சிவாஜி-சரோஜாதேவி
தினசரி 4 காட்சிகள்
ஆலயமணி
— புதிய பிரதி —

ராஜா யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)


## ஆட்சியை....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

''ஜனாதிபதி தேர்தலின் பின்பு மதகுருமாரைக் கைது செய்ததுபோல், சர்வசனவாக்கெடுப்பு முடிந்ததும் எம்மீதும் கைவைக்கலாம். இதன்பின்னர் ஜனாதிபதி தாமே, தனக்கு விருப்பியவர்களைத் தமிழ்த் தலைவர்களாகவும் நியமித்துவிடுவார் அமரர் தந்தை செல்வா, எதன்மூலம் சில உரிமைகளையும், பொறுப்புக்களையும் மாவட்ட அபிவிருத்தி சபைகள் தந்ததாலேயே நாம் அவற்றை ஏற்றுக் கொண்டோம். நாம் அரசாங்கத்துடன் தமிழ் மக்களின் உரிமைகள் சிலவற்றிற்காகவே பேச்சுவார்த்தைகள் நடாத்தினோம். உலகில் எந்த நாடுகளும், அரசாங்கங்களும் பேச்சுவார்த்தைகள் நடாத்தத்தவறியது இல்லை. பேச்சுவார்த்தை நடாத்தியதன்மூலம் எமது உரிமைகள் எதையும் விட்டுக் கொடுக்கப்போவது இல்லை தமிழ் மாவட்டங்களிலுள்ள ஆறு மாவட்ட அபிவிருத்தி சபைகளையும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் கைப்பற்றினோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி., கோப்பாய் எம்.பி. திரு. மு. ஆலாலசுந்தரம், உடுப்பிட்டி எம். பி. திரு த இராசலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே துரைரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், மாவை சேனாதிராசா உட்பட இன்னும் பலரும் உரையாற்றினர்.


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எங்கம்மா
சபதம்

வெஸ்லி மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி.ஞாயிறு 2-30
கார்த்திக் — ராதா
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

வின்ஸர் தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
BUD SPENCER IN
They Called Him Bull Dozer
AN ENJOYABLE COMMEDY
ABOUT A GAME OF FOOT BALL
முழுநீள ஹாஸ்யப்படம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி தினசரி 10-30, 3-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஓவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film......
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் தீரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......


## எரிபொருள் விற்பனை நிலையத்தில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் விற்பனை நிலையத்தில், துப்பாக்கி முனையில் கொள்ளை நிகழ்ந்துள்ளது.

மல்லாகம் சந்தியில் இருக்கும் அளவெட்டி ப. நோ கூ. சங்க எரிபொருள் விற்பனை நிலையத்திலே நேற்று முன் தினம் அதிகாலை 2-15க்கு இச் சம்பவம் இடம்பெற்றது.

விற்பனை நிலையத்தில் நுழைந்த நால்வர் லாச்சியைத் திறந்து 950 ரூபா 87 சதத்தையும் எடுத்துக்கொண்டு, விற்பனைக்கிருந்த பொலிசிங்குளோத் துண்டுகளையும் அள்ளிக்கொண்டு புறப்பட்டார்களாம்.

நான்கு இளைஞரில் இருவர் சைக்கிளில் செல்லும் பொழுது மற்ற இருவரும் அவர்களை பின் தொடர்ந்து ஓடிச் சென்றனராம். மேலைச லச்சித் திறப்பு. மல்லாகம் புகையிர நிலைய வீதியில் காலையில் கண்டெடுக்கப்பட்டது.

கொள்ளை சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலைப் பொறுப்பதிகாரி, பொன். சுகுனேந்திரன் தலைமையில் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

[யா]

## பரிசு பெற்றார்



பாரீஸ் சுப்பிரமணிய பாரதியார் நூற்றாண்டு விழா குழு உலக ரீதியில் நடாத்திய பொதுமக்கள் பிரிவு கவிதைப் போட்டியில் அல்லைப்பிட்டியை சேர்ந்த திரு நா. சச்சிதானந்தன் எழுதிய ''பாரதி ஒரு குழந்தை கவிஞன்'' என்ற கவிதைக்கு பணமும் சான்றிதழும் ஆறுதல் பரிசாக கிடைத்துள்ளது.

இவ நல்லொழுக்க சிறுவர் பரிபாலன திணைக்கள [வடபகுதி] த்தில் பிரதம லிகிதராக கடமையாற்றி வருகின்றார்.

தமிழ் ஆர்வமும், கலையார்வமும் பெற்ற இவர் இளம் வயதிலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட கவிதைகள் கட்டுரைரைகள் எழுதியுள்ளார்,

— ''கலைப்பித்தன்''


## பாராட்டு விழா

[யாழ்ப்பாணம்]

திரு- க, தம்பிராசா சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டும் முகமாக ஆனைக்கோட்டை அ. மி. க. க. பாடசாலை மண்டபத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவுக்கு முன்னதாக, புதிய ஜே. பி. ஆனைக்கோட்டைச் சந்தியிலிருந்து விழா மண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

விழாவுக்கு திரு. த. குணரத்தினம் தலைமை வகித்தார்.

திருவாளர்கள் ஐ. சந்திரராஜா, விஸ்வலிங்கம், தா, இரத்தினசபாபதி, ம, யேசுரத்தினம், திருநாவுக்கரசு, செ, தில்லைநாதன், வே, கப்பாட்பிள்ளை, இ, க, பாலசுரதரம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்,



பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் அழைப்பின் மீது யாழ் வந்த தமிழ் நாடு பனம்பொருள் அபிவிருத்தி நிபுணர் கே. சம்பந்தர், பனைவளர்ப்பு பிரசாரப் பாடகர் ரமேஷ் வைகுந்தவாசனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தபோது எடுத்தபடம். சைவப்புரவலர் திரு. கனகராஜாவும் படத்தில் காணப்படுகிறார்கள்.

# ஆசியா விமோசனத்துக்கு லெனின் என்ன பங்கு வகித்தார்?

நூல்: லெனினும் ஆசியாவும்
ஆசிரியர்: த. துரைசிங்கம்
வெளியீடு: சோஷலிச ஆய்வுக்கழகம்,
31, வில்ஸன் வீதி,
கொழும்பு - 12
விலை: ரூபா 10·00

உலக உழைக்கும் மக்களின் வாழ்வுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்த முதலாவது சோஷலிச சோவியத்தின் நிறுவகர் மாமேதை லெனின், ஆசியக் கண்டத்தின் விமோசனத்துக்கு எத்தகைய பங்கினை வகித்தார் என்பதனைக் காத்திரமான விளக்கங்களோடு, மிகவிரிவாக அலசி ஆராய்ந்திருக்கிறார் இந்த நூலின் ஆசிரியர் த துரைசிங்கம்.

'லெனினும்ஆசியவும்' என்று தலைப்பிட்டு எழுதப்பட்டுள்ள இந்த நூலின் ஆசிரியர் ஒரு சட்டத்தரணி என்று சொல்லுவதிலும பார்க்க இந்த நாட்டின் புரட்சிகர இயக்கத்தின் பழம் பெரும்முன்னோடி என்று குறிப்பிடுவதே பொருத்தமானதாகும்.

வெகுஜனத்தலைவர் லெனினின் 110-வது பிறந்த நாளையொட்டி கொழும்புசோஷலிச ஆய்வுக்கழகம் இந்நூலைவெளியிட்டுள்ளது.

லெனின் கருத்துக்களும் நடவடிக்கைகளும் அக்டோபர் புரட்சியும் ஆசியாவுக்கு எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதனை அருமையாக விளக்குகிறார் அறிஞர் துரைசிங்கம்.

லெனின் என்ற புரட்சிச் சிந்தனையாளன் தமது நூல்களில் சோஷலிச அரசு குறித்தும் ஜனநாயகம் குறித்தும் தெரிவித்துள்ள பல்வேறு பிரச்னைகளையும் கருத்துக்களையும் நூலாசிரியர் மிக ஆழமாக ஆராய்ச்சி செய்து ஆசியாவுக்கு லெனின் எவ்விதம் வழி காட்கிறார் என்பதனை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆசிய மக்களின் விடுதலை வெற்றிக்கும் விடுதலைக்கும் லெனினும் லெனிஸமும் தான் காரணம் என்பதனையும் அடித்துச் சொல்கிறார்! நீண்டகாலமாக சோஷலிசப்பாதைக்குள் 'பாண்டு' வாழ்ந்தவர் நூலாசிரியர்! லெனின் சிந்தனைகளையும் அவரது உணர்வுகளையும் ஆசியநட்டுக்கு எவ்வித தாக்கத்தை படி ஏற்படுத்தியது என்று சொல்கிறார்.

—'ஆசியா எங்கிலும் பிரமாண்டமானதொரு ஜனநாயக இயக்கம் வளர்ச்சி பரவலடைந்து வலிமை பெற்றுவருகிறது அங்கு பூர்ஷுவா வர்க்கம் இன்னும் பிற்போக்குவாதத்துக்கு எதிராக மக்களுக்கு ஆதரவாக நிற்கிறது கோடான கோடி மக்கள் வாழ்வு வேண்டி, ஒளி வேண்டி சுதந்திரம் வேண்டி விழிப்புற்று எழுகின்றனர்.

கூட்டுவாதத்துக்கான பாதை ஜனநாயகத்தினூடே உள்ளது என்பதை அறிந்த வர்க்க உணர்வுபெற்ற தொழிலாளர் இதயங்களில் இவ்வுலக இயக்கம் பரவசத்தை உண்டு பண்ணுகிறது சகல உண்மை ஜனநாயகவாதிகளின் உள்ளத்திலும் ஆசிய மீது அனுதாப உணர்வு கொண்டுள்ளது!'

—லெனின் ஆசியாவின் விடுதலைப் போராட்ட உணர்வை இப்படிச் சுட்டிக்காட்டினார்.

லெனினின் புரட்சிகர கருத்துக்களைத் தன நூலில் தகக, இடங்களில் சேர்த்து. தனது சிந்தனைகளையும் ஓடவிட்டிருக்கிறார் நூலாசிரியர்.

—'அறிவில்லாத தொழிலாளர் பாதுகாப்பற்றோராவர். அறிவோடு அவர்கள் ஒரு சக்தியாவர்.'

லெனின் சிந்தனையோடு, தனது புரட்சிக்கருத்துக்களினையும் இரண்டறக்கலந்து நூலோடு அவற்றைப் பகிர்ந்து கொள்கிறார் துரைசிங்கம் அவர்கள்.

பதினொரு அத்தியாயங்கள் 'ஆசியாவில் புரட்சிக்குமுறல்' என்பது முதலாவது அத்தியாயமாகத் தொடங்கி, 'லெனிஸ சமாதானக் கொள்கை' என்ற தலைப்பில் கடைசி அத்தியாயத்தை முடித்திருக்கிறார்.

கடைசிச் சில பக்கங்கள் லெனின் நூல்களிருந்து தொகுக்க பட்டுள்ள கட்டுரை வெளியாகியுள்ளன.

''உலகெங்கிலும் கம்யூனிச ஸ்தாபனம் வளர்ச்சியுற்று வருகின்றது. உலகெங்கிலும் கம்யூனிஸம் வெற்றிவாகை சூடுவதை நாம் சீக்கிரம் காணப் போகிறோம்'' என்று 1919 மார்ச்சில் லெனின் உதிர்த்த முத்துக்களை நூலின் இறுதிப் பாகத்தில் நூலாசிரியர் சேர்த்திருக்கிறார். லெனின் கனவும், நூலாசிரியர் நோக்கும் எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பதனை நீங்களும் இந்த நூலினை ஒருமுறை ஆழ்ந்து படித்துப் பார்க்கவேண்டும்.

நாவல்களையோ, கதைகளையோ படிப்பதுபோன்று இந்நூலை நுனிப்புல் மேயமுடியாது!

ஆழமாக எழுதப்பட்டுள்ள இந்நூலை, ஆழ்ந்து படிக்க வேண்டும்! அப்பொழுதுதான் புரிந்து உண்மைகளை உணர்ந்து கொள்ள முடியும்!

எழுத்துக்களில் நெளிவு சுளிவுகளை வைத்து, நல்ல தமிழ் கவிதைகளைப் படைக்

[8-ம் பக்கம் பார்க்க]

## முள்ளிக்குளத்தில...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] பாக்கிழுனையில் பெண்ணின் நகைகளை கொள்ளையடித்த பின்னர் ஆண்களிடம் [illegible] தக்கேட்டனராம். [illegible] ஸ்ஸில் பணி செய்த [illegible] கூட்டுறவு சங்க மனேஜர் குருஸ் [illegible] பயரிடமிருந்து [illegible]000 ரூபா கொள்ளை முயற்சி நடந்தது.

மற்றுமொரு பிரயாணிதம்மிடமிருந்த 800 ரூபாவை தர முடியாது என்று துணிவுடன் கூறி கொள்ளையரை எதிர்த்து போராட தயாரானபோது இவருக்கு மற்றும் பிரயாணிகளும் உதவ முற்படும் சமயத்தில் முகமூடிக்கொள்ளையர், [illegible] அவர்மீது குறி பார்த்துச் சுட்டதாகவும், ஆனால் அது வெடிக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

துவக்கு வெடிக்காததைக் கண்டதும், பிரயாணிகள் கொள்ளையர் மீது பாய்ந்து தாக்க ஆரம்பித்தனரென்றும் ஒரு பிரயாணி துவக்கைப் பறித்து கையினால் முறித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது 800 ரூபா வைத்திருந்த பிரயாணி கத்திக்குத்துக்கு இலக்கானார்.

பிரயாணிகளின் எதிர்ப்பைச் சமாளிக்கமுடியாத இரு முகமூடிக்கொள்ளையர், பலத்த காயத்துடன் காட்டுக்குள் ஓடிவிட்டதாகவும், மற்றும் 3 முகமூடிக்கொள்ளையர் மடக்கி சிறைப்பிடிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதே சமயம், சம்பவத்தைக் கேள்விப்பட்டு, கல்லாறு கோவில் பூசைக்குச் சென்றுகொண்டிருந்த வண. மங்களராஜ் சுவாமிகள் ஜீப்பில் அவ்விடத்திற்கு விரைந்து சென்று மினி பஸ்ஸில் பிரயாணிகளையும், மற்றும் சிறைபிடிக்கப்பட்ட முகமூடிக் கொள்ளையர்களைத் தமது ஜீப்பிலும் ஏற்றிக்கொண்டு சிலாபத்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. நீலகண்டனிடம் சென்றதாகவும் கூறப்படுகிறது.

உதவி அரசாங்க அதிபரின் ஆலோசனைப்படி வண. மங்களராஜ் முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு விரைந்தபோது அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டு, பொலிஸார் உஷார் நிலையடைந்தார்கள்.

மங்களராஜ் சுவாமிகள் பொலிஸாருக்கு நிலையை விளக்கி, மூன்று முகமூடிக் கொள்ளையரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

முறிந்த துவக்கும் பொலிஸாரிடம் ஒப்படைத்தபோது, பொலிஸார் அதனைப் பார்வையிட்டனர். 'எஸ் ஜி' ரக தோட்டாக்கள் இருந்தபோதும் அது வெடிக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முகமூடிக் கொள்ளையர்கள், குடியேற்ற பகுதியுமந்திரிகைப் பண்ணையைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. காயமடைந்த 3 கொள்ளையரும், மன்னார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, நிலைமை மோசமானதால், அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை ஏழு மணிக்கு நடந்தது.

### மற்றுமொரு சம்பவம்

சிகரெட் வான் ஒன்று நேற்று மாலை ஐந்து மணியளவில் முருங்கன்-மடுவீதியில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

முருங்கன் பகுதியில் விற்பனையை முடித்துக்கொண்டு வவுனியா சென்றபோது, மோட்டார் சைக்கிளில்வந்த இருவர் வானை வழிமறித்து விற்பனைப் பிரதிநிதியிடமிருந்து 18,000 ரூபாவை கொள்ளையடித்ததாகப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

## கார் விபத்தில...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரைந்தபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தடுத்து நிறுத்திக் கைப்பற்றியுள்ளனர்

கார்ச் சாரதி கே. சுந்தரலிங்கம், அவருடன் சென்ற என். கே. சிவகாந்தராசா ஆகிய இருவரும் காங்கேசன்துறைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்

சதானந்தனை மோதிய இடத்தில் கண்டெடுக்கப்பட்ட இலக்கத் தகட்டில் உள்ள இலக்கமும், காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத் தடையை மோதிச் சேதப்படுத்தியகாரின் இலக்கமும் ஒன்று என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

மரணமான திருநாவுக்கரசு சதானந்தனின் உடல் யாழ். பெரியாஸ்பத்திரியில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே. சேனாதிராசா இவ்விபத்துத் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றார்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தம்பிஐயா

இணுவில் மேற்கு இலைப்பாறிய துறைமுகக் கூட்டுத்தாபன ஊழியர் திரு. வேலுப்பிள்ளை தம்பிஐயா காலமானார் இவர் சரோஜினிதேவியின் அன்புக்கணவரும், சண்முகமலர், சரவணபவன் ஆகியோரின் தந்தையும், குகதாசன் மக்கள் வங்கி காங்கேசன்துறை] மாமனும் சயந்தினியின் பேரனுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 21-12-82 செவ்வாய்க்கிழமை பி. ப 2மணியளவில் இணுவிலில் நடைபெற்று பின்னர் பூவோடை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 5575

## கேள்வி அறிவித்தல்

வேம்படியில் வை. டபிள்யு. சி. ஏ. (Y.W.C.A.) சட்டடம் நிறுவுவதற்குரிய சட்டிடப் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விகள் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1983 ஜனவரி 5ந் திகதியுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்வது முடிவடையும்.

கேள்விப் படிவங்கள் 1982 டிசெம்பர் 31ந் திகதி வரை வை. எம். சி. ஏ. செயலாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

CHAIRMAN,
BUILDING COMMITTEE,
Y. W. C. A.

5568

## எதிர்க்கட்சிதலைவர் வீட்டுக்காவலில்!

புதுடில்லி, டிசம்பர் 20

பாகிஸ்தானிலுள்ள [illegible] எதிர்க்கட்சிகளின் தலைவரான ஜனுப். ராவ் அப்துல் ரஷீட் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

நேற்று இவரது லாகூர்நகர வீட்டை முற்றுகையிட்ட பாக். பொலிஸார் வீட்டினுள்ளேயே இருக்கும்படி பணித்து தடுப்புக்காவலில் இவரை வைத்தனர்.

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு சதானந்தன்

மாவிட்டபுரம் கிழக்கைச் சேர்ந்த சதானந்தன் அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற புகையிரத அலுவலக உத்தியோகத்தர் திருநாவுக்கரசுவினதும் திருமதி நித்திய லட்சுமியினதும் மகனும், நித்தியானந்தன் [விவசாயத்திணைக்களப் பொறியியலாளர்], தயானந்தன், ஞானந்தன், மனோசரி, நிமலாதேவி [சுகாதாரத் திணைக்களம்] ஆகியோரினதும் சகோதரனும், சிவலிங்கம் [Ceylon Ocean Lines Limited] அவர்களின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 21-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மாவிட்டபுரத்தில் நடைபெறும். 5576

## கேள்வி அறிவித்தல்

### வை. டபிள்யு. சி. ஏ. கட்டிடம்

யாழ்ப்பாணம், வேம்படி வீதிக்கு அருகாமையில் மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும், அதற்கான கட்டிடப் பொருட்களை விநியோகிப்பதற்குமான தனித்தனி கேள்விகள் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன பத்திரங்கள் 1982 டிசெம்பர் 31-ந் திகதிக்கு முன் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 50/- செலுத்துவதன் பேரில யாழ்ப்பாணம், வை எம். சி, ஏ. யில் பெற்றுக் கொள்ளலாம். தேவையான வரைபடங்களையும் மற்றும ஆவணங்களையும் யாழ். வை. எம். சி. ஏ. யில் பார்வையிடலாம்.

CHAIRMAN,
BUILDING COMMITTEE,
Y. W. C. A. (5567)

## ஆசியா...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் அரிய ஆற்றலைக்கொண்ட பண்ணுமத்துக் கவியராயர் இந்நூலைத் தமிழாக்கம் செய்துள்ளவர், நூலாசிரியரை மிகவும் புரிந்துகொண்டு, கருத்துக்களைத் தெளிவாகத் தமிழில் தந்திருக்கிறார். சொற்பஞ்சமில்லாத 'பண்ணுமத்துக் கவிராயரின் மொழிபெயர்ப்பு தங்குதடையின்றிச் செல்கிறது! மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்றே சொல்ல முடியாது!

லெனின் அட்டையை அலங்கரித்திருக்கிறார்! அழகிய அமைப்பில் நூல் வெளிவந்திருக்கிறது!

— ரங்கன் தேசிகன்.

## மரண அறிவித்தல்

### சி. சுந்தரலிங்கம்

கொடிகாமம் நொத்தாரிஸ் லிகிதர் சின்னத்தம்பி சுந்தரலிங்கம் காலமானார் இவர் கொடிகாமம் விவாக பதிவாளர் அமிர்தமலரின் அன்புக்கணவரும், சுந்தரேஸ்வரி [ஆசிரியை வல்வை மகளிர் கல்லூரி], கமலசுந்தரி, அமிர்தஈஸ்வரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவதாஸின் [காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை] மாமனும், வல்லிபுரம், செல்லம்மா, நடராசா, யோகலிங்கம், அமிர்தலிங்கம், ஆகியோரின் சகோதரனும், ஆயுர்வேத டாக்டர் இராஜரத்தினத்தின் மைத்துனருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (21-12-82) இன்று பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் பருத்தித்துறை வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

5577


வடமாகாண மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்...

விஷேச நத்தார் வெகுமதி...

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு--

சுஸுக்கி (SUZUKI) FR-80-Rs. 12950/-

சுஸுக்கி (SUZUKI) A-80-Rs. 13250/-

--மோட்டார் சைக்கிளுக்கும்...

நஷனல் (National) Two in One அல்லது K.D.K. மின்விசிறி ஒன்றினை அன்பளிப்பாக வழங்குகின்றார்கள்

சி. சின்னத்துரை அன் கொம்பனி நிறுவனத்தினர்

விரையுங்கள்.... கையிருப்பு சொற்பமே....

S. SINNATHURAI & CO.

25 Stanley Road-Jaffna: Phone: 23357


## மரண அறிவித்தல்

### பேரம்பலம் விவேகானந்தன்

ஊரெழுவைச் சேர்ந்த பேரம்பலம் விவேகானந்தன் (Consultant Engineer Nuclear Power Plant நியூ பிறன்ஸ்விக், கனடா) அகாலமரணமடைந்தார் இவர் மலாயன் பென்சனியர் பேரம்பலத்தின் அன்பு மகனும், கேணியடி திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த கோகிலாம்பாளின் அன்புக்கணவரும் ஜீவன், உஷாவின் அன்புத்தந்தையும் திருமதி லில்லிமலர் விஸ்வலிங்கம், திருமதி நேசமலர் வேலயுதபிள்ளை, பரமேஸ்வரநாதன், டாக்டர். திருமதி சொர்ணகாந்திமலர் துரைராஜசிங்கம் (லண்டன்), டாக்டர் வித்தியானந்தன் (அவுஸ்திரேலியா), சிவானந்தன், திருமதிதவமலர் விவேகானந்தன், யோகானந்தன் (பகறேன்), கலாநிதி புஸ்பமலர் சுந்தரலிங்கம் (மலேசியா), டாக்டர் செல்வானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் திருநெல்வேலியைச்சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் திரு திருமதி சிதம்பரப்பிள்ளையின் அன்பு மருமகனும், கலாநிதி மகாதேவா கனடா). திருமதி பத்மாவதி செல்வரத்தினம், இராசேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார் ஈமக்கிரியைகள் ரொரன்டோ, கனடாவில் செவ்வாய்க்கிழமை (21-12-82) பிற்பகல் 2-30 மணியளவில் நடைபெறும்.

இலட்சுமி வில்லா, கேணியடி,
திருநெல்வேலி வடக்கு.

5569

[illegible] 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q B. 100/236/81 Eelanaadu - P. O. Box 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.